REGISTERED AS NEWSPAPER

# உதயன்


பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 341 ஐப்பசி 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 06 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## இன்னொரு கொத்தணி வெலிக்கடை சிறையில்

கொழும்பு, நவ. 6
இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை மினுவாங்கொட ஆடைத் 18 ▸

# ஒரே நாளில் 5 பேர் உயிரிழப்பு



கொழும்பு, நவம்பர் 6
இலங்கையில் கொரோனாத் தொற்றால் ஒரே நாளில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் மூவர் வீடுகளில் இருந்தவாறே உயிரிழந்துள்ளனர். 3 பெண்களும், 2 ஆண்களும் நேற்றுமுன்தினம் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்று மாலை தெரிவித்தார். 18 ▸

**மூவர் வீட்டிலேயே இறப்பு**

**இரு வாரங்களில் 16 பேர் சாவு**

**மொத்தப் பலி 29 ஆக உயர்வு**

## அல்வாயில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவருக்கு கொரோனா

14 வயதுச் சிறுவனும் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், நவ.6
பேலியகொட மீன்சந்தைக்குச் சென்று வந்த கரவெட்டி வடக்கு ஆண்டாவளவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருடன் தொடர்பிலிருந்த அல்வாயைச் சேர்ந்த மூவருக்கு நேற்று தொற்று உறு 18 ▸

## உடுவில் சிறுவனின் சகோதரியும் மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 9 வயதுச் சிறுவனின் 11 வயது சகோதரி, 18 ▸



*முச்சந்தி முரளி*

"போகப் போக கொரோனா உக்கிரமாகுது இவை என்னென்டா இன்னும் சூனியப் பானையோட திரியினம் பாருங்கோ"

## கிளினிக் நோயாளர் வீடுகளுக்கு மருந்துகள்

வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் அறிவிப்பு

(விரிவு பக்.3)

## தனிமைப்படுத்தலுக்கு இடையூறு விளைவித்தவர் மறியலில்

யாழ்ப்பாணம், நவ. 6
தனிமைப்படுத்தல் விடயத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தகாத வார்த்தையால் அச்சுறுத்திய நபர் ஒருவர் மல்லாகம் 18 ▸

## கோப்பாய் கொரோனா சிகிச்சை: பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸார் - ராணுவம் கைகலப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையமாகச் செயற்படும் கோப்பாய் தேசிய கல்வியல் கல்லூரியில் பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸாருக் 18 ▸

## பைடன் முன்னிலை

04 ▸

## அமைச்சர்கள், அதிகாரிகள் தென்னிலங்கையிலிருந்து வடக்குக்கு படையெடுப்பு

- 160 பேருடன் கச்சேரியில் கூட்டம்
- வீதி திருத்த நிகழ்வுகளும் ஒழுங்கமைப்பு
- வடக்கு மாகாண அதிகாரிகள் பேரச்சம்

யாழ்ப்பாணம், நவ. 6
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெறும் கலந்துரையாடலிலும் வீதி திருத்தப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுக 18 ▸

## உடுவிலில் கொரோனாத் தொற்று: சிறுவனுக்கா? சிறுமிக்கா? உண்மை சொன்னது 'உதயனே'!

யாழ்.போதனா பணிப்பாளர் தகவல் 04 ▸

## கொடிகாமம் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 6
வீதித் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் ஒருவர் கொடிகாமம் முள்ளி வீதியில் 18 ▸

## மாங்குளம் மருத்துவமனையும் தயார்

முல்லைத்தீவு, நவ. 6
கொரோனா நோயாளர்களைப் பராமரிப்பதற்கு மாங்குளம் மருத்துவமனையும் தயாராக உள்ளது என சுகாதார அமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது. இன்று 04 ▸




உங்களுக்கான சிறந்த தீர்வு DFCC 1 லோன்

DFCC தனிப்பட்ட கடன்

'DFCC 1 லோன்' - நீங்கள் வாங்கியுள்ள கடன்களைச் செலுத்த 8 வருட கால எல்லையுடன், அதிகபட்சம் ரூபா.8 மில்லியன் வரை இப்பொழுது நீங்கள் கடனாகப் பெறலாம். ஆகக் குறைந்தது ரூபா.150,000/- தை மாதாந்த வருமானமாகப் பெறும் சுயதொழில் புரிபவராக அல்லது தொழில் செய்பவராக இருந்தால் நீங்கள் இக் கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

65 YEARS
DFCC வங்கி

# சமூகத் தொற்றை தடுப்பது பொதுமக்களின் கைகளில்!

### யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.6

**யாழ்ப்பாணத்தில் இதுவரை சமூகத் தொற்று இல்லை. ஆனால் எதிர்காலத்தில் நடப்பவற்றை இப்போது எதிர்வுகூற முடியாது. பொதுமக்கள் சரியான சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடித்தால் சமூகத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.**



இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப் பாணம் போதனா மருத்துவ மனைப் பணிப்பாளர் மருத்து வர் த.சத்தியமூர்த்தி.

யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனையில் நேற்று நடத் தப்பட்ட செய்தியாளர் சந்திப் பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது

இப்போது இங்கு சமூகத் தொற்று இல்லை. அதே வேளை, கோப்பாய் தனிமைப் படுத்தல் முகாம் சரியான முறையில் பராமரிக்கப்படு கின்றது. தனிமைப்படுத்தப்பட் டுள்ளவர்கள் உரிய முறை யில் தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர். அங்குள்ள கழிவுகள் உரிய முறையில் தெல்லிப்ப ளையில் எரியூட்டப்படுகின் றன. அங்கிருந்து தொற்று சமூகத்துக்குப் பரவுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. கோப் பாய் மற்றும் அந்தப் பிரதே சத்தைச் சூழ இருப்பவர்கள் அச்சப்பட வேண்டிய அவசி யம் இல்லை.

கோப்பாய் தனிமைப்படுத்தல் முகாமில் சில கட்டடங்கள் மட்டுமே உபயோகப்படுத்தப் படுகின்றன. ஏனைய கட்டடங் கள் சரியான வகையில் பரா மரிக்கப்படுகின்றன.- இந்த முகாம் மூடப்படும்போது அங்கு கற்றலை மேற் கொள்ள எந்தத் தடங்க லும் இருக்காது.

வடக்கில் எடுக்கப்படும் மாதிரி கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும், அநு ராதபுரம் போதனா மருத்துவ மனைக்கும் அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் எடுக் கப்படும் மாதிரிகளை முழு மையாக இங்கு பரிசோதிப்ப தற்கு இங்குள்ள பரிசோ தனை கொள்ளளவைக் கூட்ட வேண்டியுள்ளது. இவை அனைத்தும் மத்திய அமைச் சால் நிர்வகிக்கப்படுகின்றன.

தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் 400 பேருக்கு பரிசோத னைகள் மேற்கொள்ளக் கூடிய வசதிகள் இருக்கின் றன. எம்மிடம் இரு பி.சி.ஆர். இயந்திரங்களும் வேறு இயந் திரங்களும் உள்ளன. ஆய் வுகூடத்தில் 7 பேர் கடமை யாற்றுகின்றனர். அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீ டத்திலும் பி.சி.ஆர். பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன- என்றார். (எ)



## மாட்டுடன் மோதி இளைஞன் படுகாயம்

வவுனியா, நவ.6

வவுனியா, சூடுவெந்த புலவில் வீதியில் படுத் திருந்த மாட்டு டன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள் ளானதில் இளை ஞர் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதி காலை 1 மணியளவில் நடந் துள்ளது. விபத்தில் காயம டைந்த 26 வயது இளைஞர், பொதுமக்களின் உதவியுடன் வவுனியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இரவுப் பணி முடித்து வீடு திரும் பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்துத் தொடர்பான விசார ணைகளை உலுக்குளம் பொலிஸார் மேற்கொண்டுள் ளனர். (எ-18)



## பாடசாலை வாகனத்துக்கு மீண்டும் லீசிங் சலுகை!

கொழும்பு, நவ.சு.

பாடசாலை வாகன உரிமை யாளர்களுக்கு, மீண்டும் லீசிங் சலுகையை வழங்கு வது குறித்து, அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று போக்குவரத்து அமைச் சர் காமினி லொக்குகே தெரி வித்துள்ளார்.

கொரோனாவால் பாடசாலை வாகன உரிமையாளர்கள் மிகப் பெரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என்று அகில இலங்கை பாடசாலை வாகன உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் பாடசாலை வாகன உரிமையாளர்களின் நிலை யைக் கவனத்தில் கொண்டு, எதிர்வரும் சில நாள்களில் மீண்டும் அவர்களுக்கு லீசிங் சலுகையை வழங்க அரசாங் கம் நடவடிக்கை எடுக்கவுள் ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

## முல்லைத்தீவு வருவோருக்கு கட்டாய தனிமைப்படுத்தல்

முல்லைத்தீவு, நவ.6

வெளிமாவட்டங்களில் இருந்து முல்லைத்தீவு மாவட் டத்துக்கு வருபவர்கள் 14 நாள்களுக்குக் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற கொரோனாத் தொற்று அவசரநிலை தொடர்பான கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-246)

## நுவரெலியா நீதிமன்றுக்கு தற்காலிகமாகப் பூட்டு?

நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நடவ டிக்கைகளை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநி றுத்துமாறு, நுவரெலியா சட்டத்தர ணிகள் சங்கம் கோரிக்கை விடுத் துள்ளது. கொரோனாத் தொற்றாள ராக இனங்காணப்பட்ட குற்றப்புல னாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர், நுவரெலியா நீதிமன்றத்துக்கு வந்துச் சென்றமையைத் தொடர்ந்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந)



## மன்னாரில் எவருக்கும் தொற்றில்லை!

மன்னார், நவ.6

மன்னாரில் நேற்று மேற் கொள்ளப்பட்ட 104 பி.சி. ஆர். பரிசோதனையில் எவ ருக்கும் தொற்று இல்லை என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் ரி.வினோதன் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொரோனாத் தொற்றுள்ள வர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் மேல்மாகாணத்தில் இருந்து வந்தவர்கள் என்ற அடிப் படையில் தனிமைப்படுத்தப் பட்ட 104 பேருக்கே பி.சி. ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருந்தது.

மேல்மாகாணங்களில் இருந்து வந்து வங்காலை, முசலி, மாந்தை மேற்கு ஆகிய இடங்களில் தங்கியி ருந்தவர்களே பரிசோத னைக்கு உட்படுத்தப்பட்டி ருந்தனர்.என்றார். (எ-213)

# இலங்கையின் வருமானம் 50 வீதமாகக் குறையலாம்!

### எச்சரிக்கின்றது இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, நவ.6

கொரோனாத் தொற்று நாட் டில் மீண்டும் அதிகரித்துள்ள நிலையில், தற்போது வழங் கப்பட்டுவரும் கொடுப்பனவுக ளால் அரச வருமானம் 50 சதவீதமாகக் குறையலாம் என்று இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் புதிய அறிக்கைக்கமைய, இந்த வருடம் ஜனவரி மாதத் திலிருந்து ஜுலை வரையான காலப்பகுதிக்குள் மட்டும் அரச வருமானம் 25.9 சதவீ தமாகக் குறைந்துள்ளது. கடந்தாண்டின் முதல் 7 மாதங்களுடன் ஒப்பிடும்போது, 267.6 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதாவது கடந்தாண்டு முதல் 7 மாதங்களில் அரசின் வரு மானமாகக் காணப்பட்ட ஆயிரத்து 33 பில்லியன் ரூபா, இந்த வருடம் முதல் 7 மாதங்களில் 765.4 பில்லி யன் ரூபாவாகக் குறைந்துள் ளது.

முதல் 7 மாதங்களில் அர சின் வரி வருமானம் 944.4 பில்லியன் ரூபாவிலிருந்து 274 பில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. இந்த வரி வருமான வீழ்ச்சியானது 29 சதவீதமாகக் கருதப்படு கின்றது.

எதிர்பார்த்த வரியை அறவிட அரசால் முடியாமல் போனமை மற்றும் அரசின் வரி நிவார ணத் திட்டங்களுக்கு பயன் டுத்தப்படுகின்றமை என்பவற் றால் மறைமுக வருமானமும் குறைவடைந்துள்ளது.

இதற்கு கொரோனா வைரஸ் தொற்றே பிரதான காரண மாக அமைந்துள்ளது என் றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

# நாட்டை ஒருபோதும் முடக்க அனுமதியேன்

## ஜனாதிபதி கோத்தாபய விடாப்பிடி

கொழும்பு, நவ.6

**நாட்டை இப்போது முடக்க முடியாது. நாளாந்த உழைப்பாளர்களின் நிலை தொடர்பில் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**



பல்துறை அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுகாதார அறிவுறுத்தல்களை சரியாகப் பின்பற்றினால் எந்தப் பிரச்சினைகளும் இன்றி நாட்டை முன்கொண்டு செல்ல முடியும். ஊரடங்குச் சட்டம் அமுலானால் தான் மக்கள் வீட்டுக்குள் இருக்கின்றார்கள். ஆனால், மக்கள் இந்த விடயத்தை அவதானமாகக் கடைப்பிடிக்க வேண்டும். நாளாந்த உழைப்பாளர்கள் தொடர்பாக நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். நாட்டை முடக்கினால் அவர்கள் மீண்டும் தங்களது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப பல வருடங்கள் செல்லும். அனைவரும் ஒன்றிணைந்து தற்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும். நாட்டை முடக்க முடியாது பாடசாலைகளை மூடுவதற்கு இலகுவாக உத்தரவிட முடிந்தாலும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றி அவதானம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

---

## வாகன அனுமதிப்பத்திர விநியோகம் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தம்

கொழும்பு, நவ.6

மேல்மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு மற்றும் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை. www.motortraffic.wp.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வாகன வருமான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ).

---

## மக்களுக்கு அச்சமூட்டினால் அழிக்கலாமா கொரோனாவை?

*எரான் விக்கிரமரத்ன கல்வி*



கொழும்பு, நவ.6

மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியுமா? என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன கேள்வியெழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக வைரஸ் பரவல் தொடர்பில் அக்கறை கொள்ளாமல் இருந்தது.

இதனால் தற்போது சமூகப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒரு மாதகாலமாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் இன்னமும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவார ணங்களை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கவில்லை.

பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலனுக்காக நிவாரணங்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச தீர்மானங்கள் எடுப்பதில் தோல்வியடைந்துள்ளார் -என்றார். (ந-இ)

---

## மீண்டும் இயங்கும் கல்வி அமைச்சு!

கொழும்பு, நவ.6

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்ட பத்தரமுல்ல பகுதியில் உள்ள கல்வி அமைச்சகம் தொற்று நீக்கம் செய்யப்பட்டு நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிக்கு கொரோனாத் தொற்றாளர் ஒருவர் வந்து சென்றதை அடுத்து இசுருபாய கட்டடம் நேற்று முன்தினம் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-இ)

---

## கொரோனா ஒழிப்புக்கு புதிய டிஜிட்டல் திட்டம்!

கொழும்பு, நவ.6

கொரோனா ஒழிப்புக்காக தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட "பாதுகாப்பாக இருப்போம்" டிஜிட்டல் திட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு நேற்று முன்தினம் அறிமும் செய்து வைக்கப்பட்டது. ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கொவிட் ஒழிப்பு விசேட செயலணி ஒன்றுகூடல் நேற்று இடம்பெற்ற போது இந்தப் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கொவிட் தொற்றாளர்களின் தொடர்புகளைக் கண்டறிதல் மற்றும் நோய்க்காவிகளின் சுழற்சி கொவிட்19 பரவுவதைத் தவிர்ப்பதில் முக்கிய சவாலாக உள்ளது. எனவே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதாக இது அமைகிறது.

"பாதுகாப்பாக இருப்போம்" என்ற இந்தப் புதிய டிஜிட்டல் திட்டம் QR குறியீட்டின் அடிப்படையில் அமைந்ததாகும். Staysafe.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று அனைத்து நிறுவனங்களும் தனித்துவமான QR குறியீட்டை பெற முடியும். நாளை சனிக்கிழமை முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ற-இ)

---

## சட்டவிரோத வாகனத்தை விரட்டிய பொலிஸ் சாவு

புத்தளம், நவ.6

புத்தளம், ஆனமடுவ பகுதியில் நேற்று அதிகாலை ஏற்பட்ட வாகன விபத்தில் ஆனமடுவ பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பாளர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் ஆனமடுவ குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

சட்டவிரோதமாக கால்நடைகளை ஏற்றிச் சென்ற லொறியொன்றை துரத்திச் சென்ற வேளையில், பொலிஸார் பயணித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் சுற்றுவட்ட கட்டடத்தில் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-இ)

---

## பஸ் கட்டணங்கள் தற்காலிக உயர்வு?

கொழும்பு, நவ.6

கொரோனாத் தொற்று முடிவுக்கு கொண்டு வரப்படும் வரை, பஸ் சேவைக் கட்டணங்களை தற்காலிகமாக அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து பஸ் கட்டணங்கள் உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த பஸ் கட்டணத் திருத்தம் மற்றும் கொரோனாப் பரவல் காலத்தில் பஸ் துறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் அடங்கிய யோசனைகள் என்பன தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் நேற்று கையளிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

---

## கிளினிக் நோயாளர்கள் தகவல்களை பதிவு செய்க

*வடமாகாண சுகாதாரத் திணைக்களம் அறிவிப்பு*

கொழும்பு, நவ.6

வடமாகாணத்தின் அனைத்து அரச வைத்தியசாலைகளின் சிகிச்சை நிலையங்களில் தொற்றா நோய்களுக்காக சிகிச்சை பெறுகின்ற நோயாளர்கள் தங்களுக்குரிய வைத்தியசாலைகளின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து அவர்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பதிவு செய்யப்பட்ட சிகிச்சை நிலைய இலக்கம் (கிளினிக் இலக்கம்) என்பவற்றை அறிவித்து தமக்கான மருந்துகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளுக்குமுரிய தொலைபேசி இலக்கங்களை வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் அவசர தொலைபேசி இலக்கம் 021 222 6666, வடமாகாண சபையின் இணையத்தளம் WWW.NP.GOV.LK, வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் முகநூல் (முகவரி COVID 19, PDHS, NP) என்பனவற்றூடாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இவ் வழிமுறைகளூடாக தங்களுடைய மருந்துகளைப் பெற்றுக்கொள்வதில் ஏதாவது சிரமங்கள் ஏற்படின் அவசர தொலைபேசி இலக்கத்துடன் (021 222 6666) தொடர்பு கொள்ளவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# இலங்கையின் தேசிய சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு தாரைவார்ப்பு!

## உடன் நிறுத்துமாறு 'சிங்கலே' அமைப்பு வலியுறுத்து

**கொழும்பு, நவ.6**

**நாட்டின் தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு அர சாங்கத்தை வலியுறுத்துகின்றோம்" என்று 'சிங்கலே' அமைப்பின் பொதுச்செயலாளர் மடில்லே பன்னலோக தேரர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என தகவல்கள் கிடைத்துள்ளன.

நாட்டின் சுயாதீனத்துவத்தையும் இறையாண்மையையும் பிறிதொரு நாட்டுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் செயலாகவே நாம் இதனைக் கருதுகின்றோம். அதே போன்று, ஸ்பார்க் எயார் நிறுவனத்துக்கு மத்தள விமான நிலையத்தை நிர்வகிக்கும் பொறுப்பு கையளிக்கப்படவுள்ளமை குறித்து நாம் அறிவோம்.

தேசிய பாதுகாப்பு அடிப்படையிலும் உபாய மார்க்க ரீதியிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ந-இ)

அவிசாவளை மீன் வியாபாரிகளுடன்

## தொடர்புடைய 11 பேருக்கு தொற்றியது கொரோனா!

கொழும்பு, நவ.6

அவிசாவளை மீன் வியாபாரிகளுடன் தொடர்புடைய 11பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவிசாவளை பிரதேச மீன் வியாபாரிகள் சிலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகினர்.

.அதையடுத்து அவர்களின் உறவினர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடையோருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் முடிவில் 11பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அவிசாவளை பொதுச் சுகாதார உத்தியோகத்தர் தெரிவித்தார். (வ-இ)

## 213 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 6

இலங்கை கடற்படை நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது 63 மில்லியன் ரூபா மதிப்புள்ள 213 கிலோ கேரள கஞ்சாவை பறிமுதல் செய்தது. வெற்றிலைக் கேணி, ஆழியவளை பிரதேசத்தைச் சேர்ந்த 36 மற்றும் 41 வயதுடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். வெற்றிலைக்கேணி கடல் பகுதியில் ஒரு டிங்கி ரக படகை ஆய்வு செய்த போது 8 பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்ட 98 பைக்கற்றுகளை கைப்பற்றியதாக இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. சந்தேகநபர்கள், கேரள கஞ்சா மற்றும் டிங்கி ஆகியவை சட்ட நடவடிக்கைகளுக்காக பளை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (ஒ.ரி4)



## சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழு பலம் இழக்கின்றதா?

கொழும்பு, நவ. 6

சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக்குழுவில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளோம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் அரசு தங்களது கோரிக்கைகளை பரிசீலிக்கத் தவறியதே இந்த முடிவுக்குக் காரணம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இயக்குநர், மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார். (ம-இ)

## 45 நாள்கள் கட்டுப்பாடுகள் தொடர்ந்தால் கொத்தணிப் பரவலை கட்டுப்படுத்தலாம்

### மருத்துவர் ஹேமந்த ஹேரத் நம்பிக்கை

கொழும்பு, நவ.6

மினுவாங்கொட மற்றும் பேலியகொடவில் உருவெடுத்துள்ள கொத்தணிப் பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தொடர்ந்தும் ஒன்றரை மாதங்களுக்கு இதே கட்டுப்பாட்டு நிலைமைகளைத் தொடர சுகாதார அமைச்சு எதிர்பார்த்துள்ளது என பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.



ஒன்றரை மாதத்துக்கு இந்த நிலைமை தொடர்ந்தால் கொத்தணிப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எதிர்காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இருக்காவிடினும் எதிர்பார்க்காத பிரதேசங்களில் இந்நோய் பரவுவதை நிறுத்த முடியாத நிலை உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (வ-இ)

## தவறான முடிவெடுத்த மாணவி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 6

மூச்சு விடுவதில் சிரமம் எதிர்கொண்ட 18 வயது மாணவி தவறான முடிவு எடுத்து உயிர் துறக்க முற்பட்டபோது உறவினர்களால் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் அவர் உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த மணிவண்ணன் நிசாளினி (வயது 18) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

மூச்சுவிடுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார். பாடசாலையிலும் மயங்கி வீழ்ந்துள்ளார். மாணவி தனக்கு மூச்சுவிடுவதில் சிரமம் உள்ளது என தாயாரிடம் நேற்று முன்தினம் கூறியுள்ளார். மருத்துவமனைக்குச் செல்வோம் என்று தாயார் கூறியுள்ளார். இருப்பினும் தாயார் இல்லாத சமயம் தவறான முடிவை எடுத்துள்ளார். உறவினர்களால் காப்பாற்றப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டிருந்தபோதும் மாணவி நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ.25,26)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பைடன்...

வொஷிங்டன், நவ. 6

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டுவரும் நிலையில், நேற்று இரவு வரையிலான நிலவரங்களின்படி ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பைடன் ஆதிக்கம் செலுத்துகின்றார். குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ட்ரம்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஜோ பைடன் களமிறங்கியுள்ளார். ஒபாமா ஆட்சிக்காலத்தில் துணை ஜனாதிபதியாக பைடன் பணியாற்றியவர். இவர்கள் இருவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப உச்சக்கட்டப் போட்டி நிலவுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் 270 தொகுதிகளை எவர் முதலில் கைப்பற்றுகின்றாரோ அவரே வெற்றியாளர். நேற்று மாலை 4 மணி வரையிலான நிலவரத்தின்படி 264 தொகுதிகளை பைடன் கைப்பற்றியுள்ளார். ட்ரம்ப் 214 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளார்.

பைடனின் வெற்றிக்கு இன்னும் 6 தொகுதிகளும் ட்ரம்பின் வெற்றிக்கு இன்னும் 56 தொகுதிகளும் தேவை என்ற நிலையே தற்போதுள்ளது.

ஜோர்ஜியா (16 தொகுதிகள்), வடக்கு கரோலினா (15 தொகுதிகள்), பென்சில்வேனியா (20 தொகுதிகள்), அலஸ்கா (3 தொகுதிகள்), நிவேடா (6 தொகுதிகள்) இவற்றின் முடிவுகள் இன்னும் வரவுள்ளன. நிவேடா தொகுதியின் வாக்குகள் தற்போது எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன. (ம)

### மாங்குளம்...

முதல் கொரோனா நோயாளர்கள் மாங்குளம் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்படுவர் என்று சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. மாங்குளம் மருத்துவமனையில் ஒரே நேரத்தில் 30 பேருக்கு சிகிச்செய ளிக்கும் வசதிகள் காணப்படுகின்றது என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஓ.5)

### சிறுவனுக்கா?

யாழ்ப்பாணம், நவ. 6

கடந்த சில தினங்களுக்கு முன்னர் உடுவில் சுகாதார அதிகாரி பிரிவில் சிறுவன் ஒருவன் கொரோனா தொற்றுக்கு இலக்காகியிருந்த நிலையில், ஊடகங்களில் சிறுமி ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்தார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் 'உதயன்' சரியான முறையில் சிறுவன் ஒருவனே தொற்றுக்குள்ளாகியிருந்தான் என்று வெளிப்படுத்தியிருந்தது. ஏனைய ஊடகங்களில் முரணாகச் செய்திகள் வெளியாகிருந்தமையால் மக்கள் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பின் பின்னர் தெளிவுபடுத்தலை வழங்கிய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் தொற்றுக்குள்ளானவர் சிறுவனே என்பதைத் தெளிவுபடுத்தினார். (எ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வரவேண்டும் பைடன்

உலகில் உள்ள அத்தனை நாடுகளின் கவனக் குவிவைப் பெற்றுள்ளது அமெரிக்கா. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் அல்லது அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பைடன் இருவரில் எவர் உலக வல்லரசைக் கட்டியாளப் போகின்றனர் என்பதே அந்த கவனக் குவிவுக்குக் காரணம்.

நேற்று இரவு வரையிலான நிலவரத்தின்படி பைடன் வெற்றிக்கு அருகில் இருந்தார். ட்ரம்பை வீழ்த்தி பைடன் வெற்றிபெற வேண்டும் என்பதுதான் உலக நாடுகள் பலவற்றினதும் எதிர்பார்ப்பு. ஏனெனில் ட்ரம்பின் ஆட்சி அவ்வளவு ஏற்கத்தக்கதாக இல்லை. தன்னாட்டு அமைதிக்கும் உலக அமைதிக்கும் பங்கம் விளைவிப்பவராகத்தான் ட்ரம்ப் இருந்திருக்கின்றார். அவரின் கடந்தகால திட்டங்கள் மற்றும் உத்தரவுகள் அதையே கற்பிதம் செய்கின்றன.

மத்திய கிழக்கில் இன்று சூழ்ந்துள்ள போர் மேகத்துக்கும், இதற்கு முன்னர் நடைபெற்ற அகதிகள் பெருக்கத்துக்கும் அமெரிக்காவுக்குப் பெரும் பங்குண்டு. அகதிகளின் தோற்றுவாயாக இருக்கும் அமெரிக்காவுக்குள் அகதிகளை வரவேண்டாம் என்று தடுத்தவர்தான் இந்த ட்ரம்ப். ஆபிரிக்க நாடுகளுக்கு பயணத் தடைகளை விதித்தார், எல்லையில் சுவர் எழுப்பினார், ஹமாஸ் போராளிகளை அழிக்க நின்றார், பலஸ்தீனத்திடம் இருந்து பறிக்கப்பட்ட ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராகவும் அங்கீகரித்தார், மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கு அங்கீகாரம் தேடினார், இஸ்ரேலுடன் வர்த்தகம் செய்ய மத்திய கிழக்கை நிர்பந்தித்தார், ஐ.நாவில் இருந்து வெளியேறினார், அதற்குரிய நிதியை நிறுத்தினார், பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறினார், ஈராக்கின் கச்சாவை டொலர்களில் தீர்மானித்தார் இவ்வாறாக ட்ரம்பின் அடாவடித்தனங்கள் சொல்லிமாளாதவை. அமெரிக்காவுக்கே உரித்தான திமிர்த்தனம் இதுவென்றாலும் கடந்த ஆட்சிகளுடன் ஒப்பிடுகையில் ட்ரம்ப் சற்றுக் கூடுதலாகவே பொறுமையைச் சோதித்திருக்கின்றார். தொலைநோக்கற்றவராகச் செயற்பட்டுள்ளார்.

தொலைநோக்கு சிந்தனையற்றவராக மட்டுமல்ல தனது பதவிக்குரிய குறைந்தபட்ச தகுதியுடையவராகக்கூட ட்ரம்ப் தன்னை ஒருபோதும் வெளிக்காட்டியது இல்லை. ஆபாச வார்த்தைகளை பொதுவெளிகளில் அவர் பயன்படுத்தியுள்ளார், பெண்களைத் தரக்குறைவாகப் பேசியுள்ளார், உலகத் தலைவர்களை மதிக்காமல் செயற்பட்டுள்ளார், வேறுநாட்டு மக்களை இழிவாகக் கருதியுள்ளார், பாப்பரசருடன் ஏளனச் சேட்டைகளில் ஈடுபட்டார் இப்படித்தனமான சேட்டைகளுக்கும் அவர் புகழ்பெற்றவர். ஆக வல்லரசொன்றின் ஜனாதிபதி என்பதற்குரிய குறைந்த பட்ச இலக்கணங்கள்கூட ட்ரம்பிடம் இல்லை.

பைடன் ஆட்சியமைத்தால் அனைத்தும் ஓரிரவில் மாறும் என்று பொருளல்ல. ஆனால் பைடனின் ஆட்சியில் ஒபாமா காலத்தில் இருந்த ஓர் தற்கால அமைதி மற்றும் தூரநோக்குப் பார்வையுடன் அமெரிக்கா செயற்படும். ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் பைடன் துணை ஜனாதிபதியாக இருந்தவர். அந்த வகையில் பைடனில் கூடுதல் தாக்கம் செலுத்தும் நபராக ஒபாமா இருப்பார். மட்டுமல்லாமல் ஜனநாயக் கட்சியின் சித்தாந்தங்களும் உலக ஓட்டங்களும் குடியரசுக் கட்சியிடம் இருந்து சற்று வேறுபட்டவை. அது அமெரிக்க நலனுடன் உலக நலனையும் சற்றேனும் நோக்கக்கூடியது.

இதனால்தான் பலஸ்தீனம் முதல் ஆப்கானிஸ்தான் வரைக்கும் இன்று ட்ரம்பின் தோல்வியையும் பைடனின் எழுச்சியையும் எதிர்பார்த்துக் காத்துள்ளன. மட்டுமல்லாமல் ஐ.நாவில் மீண்டும் தன்னைப் பலப்படுத்தி இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுப்பதற்கும் பைடனே ஈழத் தமிழர்களுக்குப் பொருத்தமான நபராகவும் உள்ளார்.

### வல்வெட்டித்துறை

# நகரசபை அமர்வில் உறுப்பினர் அச்சுறுத்தல்

### தவிசாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 6

**வல்வெட்டித்துறை நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சதீஸ், ஏனைய உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தலை விடுத்துள்ளார் என்று அதே கட்சியைச் சேர்ந்த சபையின் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராசா குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ள நேற்று வியாழக்கிழமை சபையின் சிறப்பு அமர்வு கூட்டப்பட்டது. நீச்சல் தடாகம் மற்றும் பொது விளையாட்டு மைதானம் குறித்தும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு அவை தொடர்பில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

வல்வெட்டித்துறை பொது மைதானம் சம்பந்தமாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோது, அந்தத் திட்டத்தைக் குழப்புகின்ற செயற்பாடுகளில் சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர் கஜேந்திரனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் சதீஸும் ஆரம்பத்திலிருந்தே ஈடுபட்டனர்.

உறுப்பினர் சதீஸ், ஏனைய உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தலை விடுத்தார். அத்தோடு சபையில் பயன்படுத்த முடியாத தகாத வார்த்தைகளை அவர் தொடர்ச்சியாகக் கதைத்துக்கொண்டிருந்தார். அதனால் அவரை சபையிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சியை எடுத்தபோது, அதனையும் குழப்பினார்.

வல்வெட்டித்துறை பொது விளையாட்டு மைதானத்தை கழுகுகள் கழகத்துக்கு தாரைவார்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அவர்கள் செயற்பட்டனர்.

இவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரை சந்தித்து முறைப்பாட்டைச் செய்வதற்கு திட்டமிட்டுள்ளேன், என்றார்.

நேற்றைய கூட்டம் குழப்பம் காரணமாக இடைநிறுத்தப்பட்டது. (ஒ-26)

## இலங்கை, சீனா கூட்டுக் கருத்தரங்கு

இலங்கையின் பொதுஜன பெரமுன கட்சியும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து கூட்டுக் கருத்தரங்கை நடத்தியுள்ளன.

இதற்கான ஏற்பாட்டினை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் மேற்கொண்டுள்ளது. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றதுடன் அது தொடர்பில் தனது ருவிட்டரில் பதிவொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றமை குறித்து நான் பெருமைப்படுகின்றேன். அரசியல் மட்டத்திலும் மக்கள் மட்டத்திலும் நிறுவன ஒத்துழைப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டதாக இந்தக் கருத்தரங்கு அமைந்திருந்திருந்தது - என்று தனது ருவிட்டரில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)


## அதிகளவான 'குடிமக்கள்' 3 தவறணைகளுக்கு சீல்

மல்லாவி, நவ. 6

சுகாதார விதிமுறைகளை மீறும் வகையில் அதிக அளவு குடிமன்னர்களுடன் காணப்பட்ட மூன்று கள்ளுத் தவறணைகள் மல்லாவி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நேற்று சீல் வைக்கப்பட்டன.

மல்லாவி மற்றும் மாந்தைகிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட கள்ளுத் தவறணைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றுச் சோதனையிடப்பட்டன. இதன்போதே மேற்படி தவறணைகளில் சுகாதார நெறி முறைகளுக்கு முரணாக - சமூக இடைவெளி இல்லாமல் அதிகமானவர்கள் இருந்ததை அடுத்து அந்தத் தவறணைகள் சீல் வைக்கப்பட்டன. (ம-9)

## ஊடகவியலாளர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை?



கொழும்பு,நவ.6

ஊடகவியலாளர்கள் சிலர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களின் இணைப்பாளர்களான ஏனைய ஊடகவியலாளர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனையை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊடகம் மற்றும் கல்விக்கான மத்திய நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர் சிலருக்குக் கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது கண்டறியப்பட்டது. இதன் காரணமாக கடந்த வாரம் நாடாளுமன்றுக்குச் சென்றிருந்த அனைத்து ஊடகவியலாளர்களையும் சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் மேலும் சில ஊடகவியலாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதியாகியுள்ளது.

இதனடிப்படையில் நாடாளுமன்ற செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர் மத்தியில், மற்றுமொரு கொரோனாக் கொத்தணி உருவாகுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே ஊடகவியலாளர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு அபாயத்தைத் தடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 2020**

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்" - *மார்ட்டின் லூதர்*

# நோயாளர்களை கவனிக்க மறுத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை




**கொழும்பு, நவ. 6**

**மருத்துவமனைகளுக்கு வருகைதரும் நோயாளர்களை பொறுப்பேற்க மறுப்புத் தெரிவிக்கும் சுகாதார ஊழியர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

நோயாளர்கள் எவராவது திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் அதுகுறித்து அறிவிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-இ)

## மீள்குடியேற்றப்பட்ட

# இந்திராபுரம் கிராம மக்கள் மின்சாரம் இன்றித் தவிப்பு

பளை. நவ.6

பளை இந்திராபுரம் கிரா மத்தில் 2016 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை என்று மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தெரிவித்ததாவது;

இந்திராபுரம் கிராமத்தில் கடந்த 2016 தொடக்கம் வெடிப் பொருள்கள். அகற்றப்பட்டு விடுவிக்கப்பட் பகுதிகளில் மக்கள் கட்டம் கட்டமாக மீளக்குடிய மர்த்தப்பட்டனர்.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு மாவட்டச் செயலகத்தால் நிரந்தர குடியிருப்புகளுக்கு அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்களால் தற்காலிகவீடுகளும் வழங்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த ஜுலை மாதம் கிராமத்துக்கு மின் விநியோகத்துக்குரிய கம்பங்கள் நடப்பட்டு கேபிள் வயர்களும் பொருத்தப்பட்டன.

குடியிருப்புகளுக்கு இலவச மின் விநியோகம் வழங்குவதற்கான நிதியை மீள்குடியமர்வு அமைச்சு வழங்கிய பின்னர் குடியிருப்புகளுக்கான இலவச மின்சாரம் வழங்கபபடுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் தற்காலிக குடியிருப்புகளில் வதிபவர்களுக்கு மின்விநியோகம் வழங்குவதற்குரிய படிவங்கள் வழங்கப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட்டு பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டன.

கிராமத்தில் உள்ள நிரந்தர குடியிருப்புகளுக்கு மின் விநியோக படிவங்கள் இன்னமும் வரவில்லையென மின்சாரம் தேவையானோரின் விவரங்கள் பிரதேச செயலக பிரிவின் வெளிக்கள அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டன.

ஆனால் இன்னமும் மின் விநியோகம் வழங்கப்படவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

பிரிவின் வெளிக்கள அலுவலர்களைக் கேட்டால் இன்று வரும் நாளை வரும் என்று மூன்று மாதங்களாக நாட்களைக் கடத்தி வருகின்றனர்.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால், விஷஜந்துக்களின் நடமாட்டம் அதிகம் காணப்படுகிறது இதனால் தற்காலிக வீடுகளில், உள்ள மக்கள் விடியும் வரை விளக்குகளை வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் , நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் இது தொடர்பில் கவனம் செலுத்தி விரைவில் மின்சாரம், வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ஐ-9)

## ஆயிரம் கிலோ விதை உழுந்து விவசாயிகளுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.6

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்க இதுவரை சுமார் ஆயிரம் கிலோ உழுந்து, விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்தது.

சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு முளைதிறன்கூடிய உழுந்து மற்றும் கச்சான், கௌப்பி போன்றவை விவசாயத் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிறுதானியங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறை மற்றும் விலை அதிகரிப்பை அடுத்து இவ் உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு விவசாய நிலங்கள் வெற்றுக்காணிகள் போன்றவற்றை சீர் செய்து சிறு தானிய உற்பத்தியில் ஈடுபடுவதற்கு சகலரும் முன்வர வேண்டும் என்று விவசாய திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த சிறுதானிய செய்கையில் ஈடுபட ஆர்வம் உள்ளவர்கள் மாவட்ட விவசாய திணைக்களத்துடன் தொடர்புகொண்டு அதற்கான விதைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

◆ ◆ ◆

வவுனியா, நவ.6

வவுனியா விவசாயிகளுக்கு 1000 கிலோ விதை உழுந்து நியாய விலையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

விதை, நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையத்தால், வவுனியா பிராந்திய பிரதி விவசாயப் பணிப்பாளர் ஊடாக இந்த உழுந்து கடந்த செவ்வாய்க்கிழமை பகிர்ந்தளிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் காலபோகத்தில், உழுந்து பிரதான பயிராகச் செய்கைபண்ணப்படுகிறது. 2020/21ஆம் ஆண்டுக்கான காலபோகத்தின்போது, உழுந்துச் செய்கைக்கான விதை உழுந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதனாலும், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாலும், விவசாயிகள் உழுந்துச் செய்கையை மேற்கொள்வதற்கு சிரமங்களை எதிர்கொண்டனர்.

எனினும் காலபோகச் செய்கைக்காக பிரதி விவசாயப் பணிப்பாளர் ஊடாக, விதைகள் நடுகைப்பொருள்கள் நிறுவனம் விவசாயிகளுக்கு விதை உழுந்தை நியாய நிலைக்கு வழங்க முன்வந்தது. இதுவரை 25 ஆயிரத்து 650 கிலோ விதை உழுந்தை அந்த நிறுவனம் விநியோகித்துள்ளது. இதன் இறுதி விநியோகம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. 1000 கிலோ விதை உழுந்து இதன்போது விநியோகிக்கப்பட்டது. (ப-18)

## பேலியகொடவுடன் தொடர்புள்ள புதிய தொற்றாளர்கள் அதிகம்!



கொழும்பு, நவ. 6

பேலியகொட மீன் சந்தைக் கொத்தணியின் இணைப்புக்களில் புதிய தொற்றாளர்கள் கண்டறியப்படுவது அதிகரித்துள்ளது என்று சிரேஷ்ட தொற்று நோயியல் நிபுணர் மருத்துவ கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்தார்.

தொற்றாளர்கள் நாடு முழுவதிலும் இருந்து கண்டறியப்படுகின்றனர். நாடு முழுவதும் இந்தநோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது. அதேநேரம் மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை கொரோனாத் தொற்றாளிகளின் இணைப்புக்களில் புதிய தொற்றாளர்கள் அவதானிக்கப்படுவது குறைந்துள்ளது.

கம்பஹாவிலும் கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் இருந்தும் அதிகளவான தொற்றாளிகள் கண்டறியப்படுவதற்கு சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. பொதுமக்கள் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கவனமாகச் செயற்பட வேண்டும் என்றார். (ம-இ)

## கொரோனா மூன்றாவது அலை

# கொழும்பு தேசிய மருத்துவமனையில் அதிகளவான மரணங்கள் பதிவாகின!




கொழும்பு, நவ. 6

கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாவது அலையில் ஏற்பட்ட 10 மரணங்களில் 6 மரணங்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் இடம்பெற்றன. கொரோனா பரிசோதனை மேற்கொள்ளாமையினால் இந்த மரணங்கள் ஏற்பட்டன என்று அரச மருத்துவ ஆய்வக விஞ்ஞானிகள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மருத்துவ ஆய்வகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் தாமதம் ஏற்படுகின்றது. இரண்டாம் நிலை சிக்கல்களைக் கொண்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளக் கூடிய வசதி இருப்பது அத்தியாவசியம். சில நேரங்களில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளும் வசதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் இருந்திருந்தால், குறித்த 6 பேரின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் - என்றார். (ம-இ)

# தனிமைப்படுத்தல் இனி வீடுகளிலேயே

## நிலையங்களின் செயற்பாடுகளும் நிறுத்தம்

முல்லைத்தீவு,நவ.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினரின் பராமரிப்பின் கீழ் இருந்த மூன்று தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையங்கள் நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளன என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கொரோனாத் தொற்று பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது அரசாங்கம் கொரோனாத் தொற்றாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளதற்கு அமைய மூன்று தனிமைப்படுத்தல் நிலையங்களும் இன்றுடன் (நேற்று)மூடப்படுகின்றன.

அந்த நிலையங்களை எவற்றுக்கு பயன்படுத்துவது என்பது தொடர்பான அறிவித்தல்கள் அரசாங்கத்தால்தான் வழங்கப்படும்.

மாவட்டத்தில் 6 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவின் கீழ் மக்கள் பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக வீடுகளில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் பி.சி.ஆர்.பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள்- என்றார். (ஐ-19)

## 226 பேர் தனிமைப்படுத்தல்:
# நிவாரணத்துக்கு ரூ. 3.6 மில். கோருகின்றது முல்லைத்தீவு

முல்லைத்தீவு, நவ. 6
முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கான அரசின் பத்தாயிரம் ரூபா பெறுமதியான நிவாரணத்தை வழங்குவதற்காக திறைசேரியிடம் இருந்து 3.6 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 226பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என்பதால் நிவாரணத்துக்காக 3.6 மில்லியன் ரூபா கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.19)

# 2,500 கிலோ கருவாடு தேக்கம்
## பேப்பராப்பிட்டி மக்களின் வாழ்வாதாரம் இழப்பு

கிளிநொச்சி,நவ.6
தற்போது கொரோனாத் தொற்றுப் பரவலடைந்துள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தின் பேப்பாரப்பிட்டி மக்கள் வாழ்வாதார ரீதியாகப் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.
கடற்றொழிலையே நம்பி வாழ்கின்ற சுமார் 50 க்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்கள், மீன்களை விற்பனை செய்ய முடியாது திண்டாடுகின்றனர்.
மீன்களை விற்பனைசெய்ய முடியாத காரணத்தால், அவற்றைக் கருவாடாக்கி விற்பனை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.
எனினும் கருவாட்டு விற்பனையும் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 2 ஆயிரத்து 500 கிலோவுக்கும் மேற்பட்ட கருவாடுகள் தேக்கமடைந்துள்ளன. இன்னும் ஒரு மாதத்துக்கு வைத்திருந்தால், அவற்றைப் பயன்படுத்த முடியாது என்று அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.
எனவே எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏதேனும் மாற்றுவழிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-113)





# பாதுகாப்பு உபகரணங்கள் கையளிப்பு

மருதங்கேணி,நவ.6
வடமராட்சி, வடமராட்சி கிழக்கு நெல்லியடி லயன்ஸ் கழகத்தினரால் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு ஒரு தொகுதி தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.
மருத்துவ அத்தியட்சகர் மருத்துவ கலாநிதி வே.கமலநாதனிடம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைத்து நேற்று கையளிக்கப்பட்டன. (ஐ-160)

# பொருளாதார சிக்கலில் நாடு

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை



கொழும்பு,நவ.6
நாடு எதிர்வரும் காலங்களில் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். எனினும் அரசு அதனை மூடி மறைக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
சர்வதேச கடன்களைச் செலுத்துவதில் இலங்கை அரசுக்கு சிக்கல் ஏற்படும் என்று சர்வதேச முதலீட்டு நிறுவனங்கள் எச்சரிக்கை செய்துள்ளன. இதனை அரசு கவனம் செலுத்தியுள்ளதாக தெரியவில்லை.
பொருளாதார நெருக்கடி தொடர்பில் உண்மை நிலவரத்தை மக்களுக்குத் தெரிவிக்காமல், அரசு அதனை மூடி மறைத்து வருகின்றது.
ஆரம்பத்தில் உரிய திட்டமின்றி வரி குறைப்பைச் செய்ததால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, கொரோனா வைரஸ் பரவலுடன் மேலும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், சர்வதேச கடன்களை செலுத்துவதற்காக நாம் குறிப்பிட்ட காலத்துக்கு நிதியைச் சேமித்து வைத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.
எதிர்வரும் 12 மாதங்களுக்கு மாத்திரம் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டு மக்களுக்கு உண்மையை மறைப்பதால் எந்த பயனும் கிடைக்கப்போவதில்லை- என்றார். (க-இ)

# இடுகம வைப்பு மீதி ரூ. 1,693 மில்லியன்

கொழும்பு, நவ. 6
இடுகம கொவிட்-19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 693 மில்லியனாக அதிகரித்துள்ளது.
தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் குறித்த நிதித் தொகை அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நிதியத்திற்காக நேற்றுமுன்தினம் மட்டும் 75 லட்சம் ரூபா பணம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# உடமைகளை இழந்தவர்களுக்கு உதவிய செஞ்சிலுவைச் சங்கம்

முல்லைத்தீவு, நவ. 6
புதுக்குடியிருப்பு தேராவில் பகுதியில் தற்காலிக வீடு எரிந்து உடமைகளை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு சில தற்காலிக உதவிகள் துரித கதியில் வழங்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளையின் இணைப்பாளர் க.நிதர்சன் நேரடியாகச் சென்று வீட்டைப் பார்வையிட்டதுடன், அடிப்படை உதவிப் பொருள்கள் சிலவற்றையும் வழங்கினார். (ம-19)

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு
# விலங்கு உணவு உற்பத்திகள் விநியோகிக்க புதிய திட்டம்

கொழும்பு, நவ.6
நாட்டில் தற்போது அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கின் காரணமாக விலங்கு உணவு, விலங்கு உற்பத்திகள், கால்நடை மருந்துகள் என்பவற்றைப் பெறுவதில் உள்ள போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால், முட்டை தொடர்பான தொழில்களின் அமைச்சுத் தெரிவித்துள்ளது.
இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒரு விநியோக சேவை நிறுவப்பட்டுள்ளது. இதைத் தொடர்புகொள்ள 0113423677அல்லது 011 3423664 ஆகிய தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
இந்தச் சேவையை விவசாயிகள் மற்றும் தொடர்புடைய தொழிலதிபர்கள் காலை 9மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும்.
இதற்கான போக்குவரத்துக்கு ஊரடங்கு அனுமதிப்பத்திரங்களைப் பெறுதல் உட்பட்ட பிரச்சினைகள் மற்றும் சவால்களைத் தீர்ப்பதில் ஒரு நடுவராகத் தொழிற்பட அமைச்சு முடிவு செய்துள்ளது. (ற-இ)

## கொரோனா பெருந்தொற்று:
# கொழும்புத் தினக்கூலிகள் வாழ்வாரத்தை இழந்தனர்!

கொழும்பு, நவ. 6
கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக கொழும்பில் தினக்கூலிகளாக இருக்கும் பலர் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவின் ஊடாக கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. ஊரடங்கு நீடிப்பின் விளைவாக மேல் மாகாணத்தில் குறிப்பாக கொழும்பு வாழ் தினக்கூலிகள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.
இலங்கையைப் பொறுத்தவரை தலைநகர் கொழும்பில் ஆயிரக்கணக்கான தினக்கூலிகள் வாழ்கின்றனர். குறிப்பாக புறக்கோட்டை பிரதேசத்தில் பொருள்களை ஏற்றியிறக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள 'நாட்டாமி' என அழைக்கப்படும் தினக்கூலிகள் இந்த ஊரடங்கு உத்தரவால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்தத் தொழிலில் ஈடுபடும் ஒருவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார். (ம-இ)



# 'முகக்கவசமே முக்கியம்' விழிப்புணர்வு செயற்றிட்டம்

சாவகச்சேரி,நவ.6
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் ஏற்பாட்டில் " முகக்கவசமே முக்கியம்" என்னும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வுச் செயற்றிட்டம், சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு முகக் கவசங்கள் வழங்கப்பட்டன.
சாவகச்சேரி சுகாதார மருத்து அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சாவகச்சேரி நகர சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் மற்றும் உறுப்பினர்கள், சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரி லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். (க-9)

# ஜனாஸாக்களை எரித்து இனவாதம் தூண்டும் அரசு

## சஜித் கொதிப்பு



கொழும்பு, நவ. 6
கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை எரித்து, அரசு இனவாதத்தையும் அடிப்படைவாதத்தையும் தூண்டுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக நாம் கடந்த ஜனவரி மாதமே எச்சரித்திருந்தோம். உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரினோம். விமான நிலையங்கள், துறைமுகங்கள் உள்ளிட்டவற்றை மூடுமாறும் கோரினோம். ஆனால், அரசு இவை அனைத்தையும் நிராகரித்தது. இதனால், இன்று நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது கொரோனாவை வைத்து நாட்டில் பிரிவினை வாதத்தையே அரசு தூண்டுகிறது.
முஸ்லிம் மக்களை இலக்கு வைத்தே தற்போது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கொரோ னாவை பரப்புவதே முஸ்லிம் மக்கள்தான் என்றும் பரப்புரை முன்னெடுக்கப்பட்டு அவர்களின் மார்க்கத்துக்கு முரணாக, உயிரிழந்த முஸ்லிம்க ளின் உடல்கள் தகனம் செய்யப்பட்டன. இது அடிப்படைவாத நடவடிக்கையாகும். உலகில் எந்தவொரு நாடும் இவ்வாறு சடலங்களை எரிக்கவில்லை.
இனவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் பரப்புவதில் தான் இந்த அரசு தீவிரமாக உள்ளது. மார்ச் மாதத்திலிருந்து நாட்டுக்கு ஒரு வெண்டிலேட்டரைக்கூடஅரசு வாங்கவில்லை. தரமான பி.சி.ஆர். இயந்திரங்களை கொள்வனவு செய்யவில்லை. கொரோனாத் தொற்றாளர்களுக்கு படுக்கைகள் இல்லை. ஐ.சி.யு. படுக்கைகள் இல்லை. இவற்றை தயாரிக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.
ஆனால், ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பலப்படுத்தும் 20ஆவது திருத்தத்தை மட்டும் உடனடியாக கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளார்கள். அரசின் கொரோனா ஒழிப்பு செயற்பாடு இன்று தோல்வியடைந்துள்ளது - என்றார். (ஒ.இ)

# ஜனாஸா எரிப்புக்கான பழியை அதிகாரிகள் மீது போட்டது அரசு

கொழும்பு, நவ. 6
மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைவாகவே கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம் மக்கள் உள்ளிட்டவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை வரலாற்றிலேயே சுகாதார அமைச்சின் சேவைகள் மிகவும் வெற்றிகரமாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசுகள் மாறினாலும் அமைச்சர்கள் மாறினாலும் மக்களுக்கு உயர்ந்த சுகாதாரத்தை வழங்க வேண்டும் என்பதுவே நோக்கமாக இருந்தது.
இதனைத்தான் நாமும் நடைமுறைப்படுத்தியுள்ளோம். இன்றும் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த நாம் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம்.
கொரோனாவை நாம் அரசியலுக்காக பயன்படுத்திக்கொள்ளவில்லை. உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைகள், சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.
இதனைத்தான் ஜனாதிபதியும் வலியுறுத்தினார். இறந்த முஸ்லிம்களின் உடல்களும் அவ்வாறுதான் எரிக்கப்பட்டன. இதில் எந்தவொரு அடிப்படைவாதமோ, இனவாதமோ கிடையாது.
சுகாதார நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைவாகவே இவை முன்னெடுக்கப்பட்டன. இதில் எதிர்காலத்தில் மாற்றங்கள் வேண்டும் என்றாலும், அதுதொடர்பாக நாம் நடவடிக்கை எடுக்கத் தயாராகவே இருக்கிறோம்-என்றார். (ஒ-இ)

## கிளிநொச்சியில்

# 90 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

**கிளிநொச்சி,நவ.6**
**கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொதிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொரோனா பாதுகாப்பு செயலணிக் கூட்டத்தில், மேலதிக மாவட்டச் செயலர் சிறிமோகனன், பிரதமர் அலுவலகத்தால் இதுதொடர்பான சுற்றறிக்கை மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பப்பட்டது என தெரிவித்திருந்தார்.
இதன்பிரகாரம், இந்த 10,000 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளை, இரண்டு பிரிவுகளாக தலா 5,000 ரூபா பெறுமதியான பொதிகளாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் மேற்கொண்டு வருகிறார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 90 குடும்பங்களைச் சேர்ந்த 487 பேர் கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சரவணபவன் தெரிவித்தார். (ஐ-இ)



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆயுள்காப்புறுதி செய்திருந்த, சாவகச்சேரி மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சோமு தவராசா என்பவரின் மரணத்துக்குப் பின்னரான கொடுப்பனவாக,11 லட்சத்து 28 ஆயிரத்து 600 ரூபாவுக்கான காசோலை, அவரது மனைவியிடம் கையளிக்கப்பட்டது. (க-9)

## கொரோனா நோயாளியின்

# இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட 50 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

கொழும்பு, நவ.6
பாணந்துறை, பொன்சேகா பகுதியில் அண்மையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி தற்கொலை செய்துகொண்ட நபரின் இறுதிச் சடங்கில் பிரதேசவாசிகள் பலர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்கள் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும், இந்தப் பகுதியும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது . (ற-இ)

# கொரோனாவை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் நுவரெலியாவில்

நுவரெலியா, நவ. 6
நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து செயற்பாடுகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நுவரெலியா மாவட்டச் செயலர் எம்.பி.ஆர்.புஷ்பகுமார தெரிவித்தார்.
தற்போது நுவரெலியா மாவட்டத்தில் ஆயிரத்து 407 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், சுயதனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதியை இன்று முதல் (நேற்று) வழங்கத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

## குருநாகல் மாவட்டத்தில்

# 2,452 குடும்பங்கள் தனிமையில்

குருநாகல்,நவ.6
குருநாகல் மாவட்டத்தில் 2,452 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.ஆர்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.
குருநாகல் நகராட்சி எல்லைகளிலும், குலியாபிட்டியா பொலிஸ் பிரிவிலும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
தற்போது நாடு முழுவதும் 63,600க்கும் மேற்பட்டவர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-இ)

# கடல் நீர் உட்புகுந்ததால் விவசாய நிலங்கள் பாதிப்பு

## கிளாலி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, நவ.6
கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிளாலிப் பகுதியில் உள்ள பல ஏக்கர் வயல் நிலங்கள் கடல் நீர் உட்புகுந்ததன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.
காலபோகத்துக்காக விதைக்கப்பட்டு, முளைத்து வந்த பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
வயலில் நெல் விதைத்து மழையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நேரத்தில் கடல் நீரானது வயல்களுக்கு உட்புகுந்தமையால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மழை இன்மையாலும் வயல் நிலம் புழுதி தன்மையில் காணப்படுகின்றது. ஓரிரு நாள்களில் மழை பெய்யாது விடின் முழுமையாக வயல் நிலங்களை கைவிட வேண்டிய நிலையே வரும்.
அத்துடன் குறித்த பகுதியில் தொடர்சியான மணல் அகழ்வுதான் இந்த உவர்த் தன்மைக்கு காரணம். கடந்த வருடம் குறித்த மண் இருந்த உவர்நிலையை விட இந்த வருடம் உவர்த் தன்மை அதிகரித்து காணப்படுகிறது - என்றனர். (ஐ-6)

# தொற்று அறிகுறி இருந்தால் சுயதனிமைப்படுத்துங்கள்!

*இராணுவத் தளபதி அறிவுரை*

கொழும்பு, நவ.6
தனியார் வைத்தியசாலை ஒன்றில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட ஒருவருக்கு தொற்று உறுதியாகியுள்ளபோதும், பொய்யான தகவல்களை வழங்கியதால் அவரைத் தேடிக் கண்டுபிடிப்பது கடினமாகியுள்ளது என்று இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
ஒருவருக்கு கொரோனாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்டால் முதலில் வீட்டில் அவர் தன்னைச் சுயதனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன்பின்னர் அந்தப் பகுதி சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.
அவ்வாறு இல்லாது உடனடியாக மருத்துவமனைக்குச் செல்வது ஏற்புடையது அல்ல. அதனால் தொற்றுக் காணப்படுமிடத்து அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது சிக்கலானதாக மாறும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (எ-இ)

## சிறை மருத்துவமனையின் மருந்தாளருக்கு கொரோனா

வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையின் மருந்தாளர் ஒருவருக்கு கொவிட்-19 தொற்று ஏற்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். இதனால் மருந்துவர்கள் அடங்கலாக 50 ஊழியர்களுக்கும், கைதிகள் குழுவினருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதனால் அதிகாரிகள் மற்றும் கைதிகளைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வெலிக்கடை சிறைச்சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## அரசை விமர்சிக்கும் தகுதி எதிர்க்கட்சிக்கு இல்லையாம்

*சீறுகிறார் டிலான் பெரேரா*



கொழும்பு, நவ.6
கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தைக் குறைகூறவோ விமர்சிக்கவோ சஜித் பிரேமதாசதலைமையிலான எதிர்க்கட்சியினருக்கு எந்தவித தகுதியும் கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
"உலகின் பல்வேறு நாடுகள் கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. இலங்கையிலும் பெரும் நம்பிக்கையுடன் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (வ-இ)

## அனுமதியற்ற ஹொட்டல்களால் சூழலுக்குப் பெரும் பாதிப்பு!

*ரூ.3,200 கோடி செலவில் புதிய திட்டம்*

கொழும்பு, நவ.6
இலங்கையில் அனுமதிப்பத்திரம் இன்றி கங்கைகளின் இரு மருங்கிலும் இயங்கும் தொழிற்சாலைகள், சுற்றுலா ஹொட்டல்கள் உள்ளிட்ட நிறுவனங்களால் கங்கைகளை அண்மித்த சூழலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதனால் இதற்குத் தீர்வு காணும் வகையில் கங்கைகளைப் பாதுகாக்கும் புதிய திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டது.
இத்திட்டத்துக்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ள நிலையில் 3,200 கோடி ரூபா செலவில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ந-இ)

## கடற்றொழில் ஸ்தம்பிதம்; நெருக்கடியில் மீனவர்கள்

அம்பாறை, நவ.6
கொரோனா அச்சம் காரணமாக கடற்றொழில் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால், பல்வேறு சிரமங்களைத் தாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என அம்பாறை மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை, கல் முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில், திருக்கோவில் ஆகிய பிர தேசங்களில் ஆழ்கடல் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளமையால், எமது படகுகளை நிறுத்தி வைக்க இடமின்றி, கனரக இயந்திரத்துக்கு அதிக பணத்தைச் செலவிட்டு, கடற்கரையோரங்களுக்கு படகுகளை இழுத்து வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதனால் ஆழ்கடல் தொழிலில் ஈடுபடும் படகுகள் பகுதியளவில் சேதமடைவதுடன், கரையோரங்களில் கருவாட்டுத் தொழில் செய்வோர் இடவசதி இன்மையை எதிர்கொண்டுள்ளனர். எங்களுடைய பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்து வைக்க வேண்டும் எனத் தெரிவித்தனர். (வ-இ)


# தனிமைப்படுத்தலுக்கு 7.3 பில்லியன் ரூபா!!

கொழும்பு, நவ. 6
கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் பொது மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்காக அரசு ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 7.3 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கீடு செய்துள்ளது. அரசதகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
மினுவாங்கொட கொத்தணி ஊடாக நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று பரவலடைவதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு (தனிமைப்படுத்தப்படும்) இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. என்றுள்ளது. (ம-இ)

## தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள்



தாழ்வு மனப்பான்மை ஏன் வருகிறது என்பதை நாம் முதலில் யோசித்துப் பார்க்க வேண்டும். தன்னை வேறொருவருடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுதுதான் ஒவ்வொரு மனிதருக்கும் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றது.
உதாரணத்திற்கு, "எனக்கு வேலை கிடைக்கவில்லை, ஆனால் அவருக்கு வேலை கிடைத்து விட்டது."
"எனக்கு கல்யாணம் ஆகவில்லை, ஆனால் அவருக்கு நல்ல முறையில் கல்யாணம் ஆகி விட்டது."
"என்னால் பரீட்சை ஒழுங்காக எழுத முடியவில்லை, ஆனால் அவர் பரீட்சையை மிகவும் அருமையாக எழுதி முடித்துவிட்டார்."
"எனக்கு அந்த திறமை இல்லை, இந்த திறமை இல்லை, என்னால் எந்த வேலையும் ஒழுங்காக செய்ய முடியவில்லை",
இவ்வாறு வேறு ஒருவரை தன்னுடன் ஒப்பிட்டுப் பார்த்து தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி கொள்கிறார்கள்.
தாழ்வு மனப்பான்மையை நீக்குவதற்கு இரண்டுவழிமுறைகளை இப்போது சொல்லப் போகிறேன்.
ஒருவரைப் பார்த்து ஒப்பீடு(Comparison) செய்வதை நிறுத்திவிட்டு, அவரிடம் இருக்கும் திறமையை ஒரு ஊக்கமாக(inspiration) எடுத்துக் கொள்ள வேண்டும்.
உதாரணத்துக்கு, ஒருவரிடம் மிகவும் அதிக அளவில் பணம் இருக்கின்றது, செல்வ செழிப்பான வாழ்க்கையை வாழ்கின்றார். உங்களுக்கும் அதிக அளவில் பணம் தேவைப்படுகின்றது. அதிக அளவில் பணத்தை சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது.
இந்த சமயத்தில் உங்களிடம் தாழ்வு மனப்பான்மை அதிக அளவில் உருவாகின்றது. உங்களுக்குள் ஏற்படுகின்ற தாழ்வு மனப்பான்மையைப் புரிந்து கொண்டு, பின்னர் அதை முற்றிலும் தவிர்த்து விட்டு நீங்கள் ஒன்றை செய்ய வேண்டும்.
அந்த நபர் இவ்வளவு பெரும் பணத்தை சம்பாதிப்பதற்கு எவ்வளவு சிறப்பாக வேலை செய்திருப்பார் என்பதை சிந்தித்துப் பார்த்து, அவரின் வாழ்க்கையை நீங்கள் ஒரு இன்ஸ்பிரேஷனாக எடுத்துக் கொண்டு, உங்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் செயல்களைச் செய்ய வேண்டும்.
மற்றவரின் வாழ்க்கையை நாம் அப்படியே பின்பற்ற வேண்டும் என்று அவசியமில்லை. அவரிடம் இருக்கும் என்ன திறமை நம்மிடம் இல்லை என்பதை கண்டறிய வேண்டும்.
அந்தத் திறமையை நீங்கள் முழுமையாக வளர்த்துக்கொண்டு, உங்களுடைய சொந்த வழியில் (unique style) உங்களின் குறிக்கோளை அடைவதற்கு முழு முயற்சி செய்ய வேண்டும்.
எனவே, நீங்கள் யாருடனும் உங்களை ஒப்பிட்டுப் (comparison) பார்க்காமல், மற்றவரிடம் இருக்கின்ற திறமையை ஊக்கமாக (inspiration) எடுத்துக்கொண்டால், உங்களிடம் இருக்கும் தாழ்வு மனப்பான்மை முழுமையாக நீங்கும்.



# இன்றைய நாள்

**மேடம்:** கனவுகள் நனவாகும். சிறிய வெற்றி ஏற்படும். மனநிறைவு உண்டு. பகையை விடுத்து நட்பாவது பற்றிச் சிந்திப்பீர்கள். லாபம் உயரும். பிரியமான சிலரைத் தேடிச்சென்று சந்திப்பீர்கள்.

**இடபம்:** முந்தைய முயற்சிகளில் முன்னேற புதிய வழி தென்படும். உங்களின் மதிப்பு உயரும். முயன்ற விஷயங்கள் தானாக நடைபெறும்.

**மிதுனம்:** முன்னேற்றம் காண்பதற்கு எடுக்கும் முயற்சி வெல்லும். பணி பற்றி எடுத்த முயற்சிக்கு உடன்பிறப்புகள் உதவுவர். உறவினருடன் சமீபத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் அகலும்.

**கடகம்:** எடுத்த முயற்சிகள் தாமதித்து நடக்கும் இனிமையான நாள். பொருள்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். வரன்கள் வாயில் தேடி வரும்.

**சிம்மம்:** முயற்சிகளில் வெற்றி பெற கூடுதலாக உழைப்பீர்கள். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் சிறு முயற்சியில் நிறைவடையும்.

**கன்னி:** திடீர்ப் பயணம் உண்டு. கோபத்தினால் வருத்தம் வரும். பணிகளில் ஏற்பட்ட தொந்தரவு அகலும். அவசரம் வேண்டாம். பிள்ளைகள் உங்களை சற்றுப் பெருமைப்படுத்துவார்கள்.

**துலாம்:** பகை அகலும் நாள். கலைகளில் ஆர்வம் ஏற்படும். பணிகளில் அவசரம் காட்டுவதைத் தவிர்ப்பது நல்லது. பெண்கள் குழந்தைகளை கவனமாகக் கையாளுங்கள்.

**விருச்சிகம்:** நாளின் முதல் பாதியில் மனம் நிறையும் செய்தி வரும். மனதுக்குப் பிடித்தவரின் தேவைகளை நிறைவு செய்வீர்கள். எதிலும் அவசரம் வேண்டாம்.

**தனுசு:** சுபநிகழ்ச்சிகள் பற்றிய தீர்மானம் முடிவுக்கு வந்து மகிழ்விக்கும். அரசியல்வாதிகளின் நட்பு கிட்டும். வருமானம் நிறைவு தரும். தொழில் முன்னேற்றம் ஓரளவுக்கு உண்டு.

**மகரம்:** அதிகாரத்தைக் கைவிட்டு தன்னம்பிக்கையால் சாதிப்பீர்கள். பெற்றோரின் ஆசி கிடைக்கும். தம்பதிகளிடையே அந்நியோன்யம் உண்டு.

**கும்பம்:** எதிர்பாராத விருந்தினர் ஒருவரின் வருகை நன்மை தரும். மனதின் மாற்றங்களுக்கு ஏற்ப செயல்பாடுகளை மாற்றாதீர்கள்.

**மீனம்:** உறவினர்களின் ஆதரவு கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். கணவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். உடல்நலனுக்கு ஒவ்வாத உணவுகளை உட்கொள்ள வேண்டாம்.

# நாடாளாவிய ரீதியில் மக்களுக்கு நிவாரணம்

### புதிய வேலைத்திட்டத்துடன் ஐ.ம.ச களத்தில்

கொழும்பு, நவ.6

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக புதிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க உள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

"உங்களது குரலை நாட்டுக்கு அறியச்செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம்" என்னும் தொனிப்பொருளில் நாட்டின் எந்தப் பகுதிகளில் இருக்கும் மக்களும் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் தெரிவிக்க முடியும் என்றும் கட்சி குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பாதிப்புகளை எதிர்நோக்கி வரும் மக்கள் 0777134053, 0777472331 மற்றும் 0779 540500 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் தெரிவிக்க முடியும்.

வைரஸ் பரவலின் முதலாம் அலையின் தாக்கம் ஏற்பட்டிருந்த போதும் நாம் எம்மால் முடிந்த உதவிகளை பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு வழங்கியிருந்தோம்.

அதேபோன்று இம்முறையும் எம்மால் முடிந்த உதவிகளைச் செய்வதுடன், மக்களது பிரச்சினைகளை உரிய தரப்பினரின் அவதானத்துக்கும் கொண்டுசெல்வோம் என ஹர்ஷ டி சில்வா மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ந-இ)

### இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

# கடலட்டைகள் இந்தியாவில் மீட்பு

மன்னார், நவ.6

மன்னார், வளைகுடா கடல் வழியாக நாட்டுக்குள் கடத்தப்படவிருந்த 25 இலட்சம் ரூபா பெறுமதியான கடலட்டைகளை, இந்தியா இராமநாதபுரம், குற்றத்தடுப்புப் பிரிவு விசேட பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இலங்கைக்கு கடலட்டைகள் கடத்தப்பட உள்ளன எனக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மண்டபம் அருகேயுள்ள வேதாளை மீனவக் கிராமத்தில் இராமேஸ்வரம் பொலிஸார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

அதில், வேதாளை கடற்கரை பகுதியிலுள்ள தோட்டத்தில் உயிருடனும் பதப்படுத்திய நிலையிலும் சுமார் 3 ஆயிரம் கிலோகிராம் எடை கொண்ட கடலட்டைகளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

மேலும் சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளதுடன் கடலட்டை களைக் கடத்த பயன்படுத்தப்பட்ட கார் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட் டுள்ளது. (வ-இ)

# திமிங்கலங்களை காத்தோருக்கு நன்றி

கொழும்பு, நவ.6



பாணந்துறை, வட்டுவ கடற்பரப்பில் கரையொதுங்கிய திமிங்கலங்களைப் பாதுகாத்து மீண்டும் கடலுக்குள் திருப்பி அனுப்ப அயராது உழைத்த அனைவருக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.


இலங்கை மக்களிடத்தில் வேரூன்றியுள்ள அகிம்சையின் நற்பண்புகளை உலகுக்கு நிரூபிக்கும் மற்றுமொரு சிறந்த வாய்ப்பாக இது அமைந்துள்ளது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாணந்துறை கடற்கரையில் கரையொதுங்கிய சுமார் 120 க்கும் மேற்பட்ட பைலட் திமிங்கலங்களை பாதுகாப்பாக காப்பாற்றி மீண்டும் கடலுக்கு அனுப்ப இலங்கை கடற்படை, இலங்கை கடலோர காவற்படை, பொலிஸ் உயிர் காக்கும் குழுக்கள், தன்னார்வ உயிர் காக்கும் குழுக்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் உள்ளிட்டோர் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் 4 பணியாளர்களுக்குக் கொரோனா

கொழும்பு, நவ. 6

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நான்கு ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக களுவேவ தெரிவித்தார். மூன்று சாரதிகள் மற்றும் மின் இணைப்பு இயக்குநர் ஆகியோ நால்வருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-இ)



# இந்தியாவுக்கு கிழக்கு முனையம்; ஜனாதிபதிக்கு எதிர்ப்புக் கடிதம்

கொழும்பு , நவ.6


கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவின் தனியார் நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து இலங்கை துறைமுக சேவைகள் பொது ஊழியர் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் பராமரிக்க வேண்டும்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது வழங்கிய வாக்குறுதிகளை இப்போது மறந்துவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# தென்கிழக்கு திசையில் இருந்து....



■ அனார்கலி



## மழை வேண்டி பிரார்த்தனையும், மழையும்!

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய விவசாயப் பிரிவுகளான அக்கரைப்பற்று, அட்டாளைச் சேனை, சம்மாந்துறை போன்ற பகுதிகளில் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட பெரும் போக நெற்பயிர்கள் நிலவிய வரட்சியால் பாதிப்படையும் நிலை ஏற்பட்டதும் கடந்த வாரம் மேற்படி பிரதேசங் களில் முஸ்லிம் விவசாயிகள் மழை வேண்டி விசேட தொழுகைகளில் ஈடுபட்டு வந்தனர்.
திடீரென அண்மைய மூன்று தினங்கள் மாலை வேளைகளில் காற்று, இடி, மின்னலுடன் கூடிய பெருமழை பல மணி நேரங்கள் பெய்ததுடன், தொடர்ந்தும் காலநிலை மாற்றம் நீடித்து வருகின்றது.
தற்சமயம் வயல் பிரதேசங்கள் மழை வெள்ளம் தேங்கி வெள்ளக்காடாக காட்சியளிப்பதும் 'குறிப்பிடத்தக்கது.

**“பிரார்த்தனைகளின் மகத்துவம்”**

## சோபிக்காத மீலாத் விழாக்கள்!

நபிகள் நாயகம்(ஸல்) அவர்க ளின் பிறந்ததினமான மீலாத் தின கொண்டாட்டங்கள் இம் முறை தென் கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் பெரும் சோபை இழந்த நிலையிலேயே இடம் பெற்றன.
வழக்கமாக ஊர்வலங்கள், அன்னதானம் வழங்கல், மௌலூது நிகழ்வுகள், போட்டி நிகழ்வுகள் எனப் பெரும் நிகழ்வுகள் இடம்பெற்று வருவது, கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இம்முறை மிக எளிமையாகவே இடம்பெற் றன.

**கொரோனா படுத்தும்பாடு!**



## இடை நிறுத்தம்!

கல்முனைபத் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கொரோனா தொற்றாளர்கள் கண்ட றியப்பட்டுள்ளதால் சுகாதார ஆலோ சனைகளை இறுக்கமாகக் கடைப்பி டிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதனால் பொதுமக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் வகையில் இப்பிராந்தியத்திலுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களிலும் ஆலயங்களி லும் ஒன்று கூடி வழிபாடுகள் இடம்பெறுவது இடைநிறுத்தப் பட்டுள்ளது.
அதேவேளை பள்ளிவாசல்கள் இப்பிராந்தியத்தில் பூட்டப்பட்ட நிலையிலுமுள்ளன.

**எல்லாம் நன்மைக்கே!**

## எரிக்காதீர், எரிக்காதீர்!

கொரோனாத் தொற்றினால் மரணமடையும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிக்காது நல்லடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப் முது நபீன், ஜனாதிப திக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் இதனை வலியுறுத்தியுள்ளார்.
கொரோனாத் தொற்று மூலம் மரணித்த ஒருவ ரின் உடலை அவரின் சமய நம்பிக்கைகள், சமூக அனுஷ்டானங்களுக்கு ஏற்ப இறுதிக்கிரி யைகளுக்குட்படுத்தலாமென உலக சுகாதார தாபனம் பரிந்துரை செய்துள்ளமையையும் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**வைத்திய அதிகாரிகள் சங்க அனுங்குப் பிடி தளருமா?**



## கையுறைகள்!

கல்முனை மாநகர சபை சுகாதாரப் பிரிவுக்கு ஒரு தொகுதி கையுறைகளை (GLOUSE) மாநகர சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சந்திரசேகரம் இராஜன் அன்பளிப்புச் செய்துள் ளார். இதனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் முன்னிலையில், மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்ஷாத் காரியப்பரிடம் உறுப்பினர் இராஜன் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

**முன்மாதிரி, முன்மாதிரி!**

## 20 ஆவது திருத்தம்!



அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் காங்கிர ஸின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ், அம் பாறை மாவட்டத்திலுள்ள பல்வேறு முஸ்லிம் பிரதேசங்களுக்கும் நேரில் சென்று தமது ஆதரவு நிலைப்பாடு தொடர்பில் முக்கியஸ்தர்களிடம் விளக்க மளித்து வருகின்றார். தெற்கின் உணர்வலைகளைத் தூண்டி விடாமல் முஸ்லிம் சமூகம் சார்ந்த முக்கிய விடயங்களை பிரதமர் உட்பட அரச உயர்மட்ட பிரதிநிதிகளுடன் பேசி உடன்பாடு கண்ட பின்னரே ஆதரவு வாக்களிக்கும் முடிவை எடுத்ததாக விளக்கி வரும் ஹரீஸ், பேசிய சில விடயங்களைக் கூற முடியாத நிலையிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**“கல்முனையைக் காப்பாற்றுவதும் இதில் ஒன்றுதானே?”**

## சுமந்திரனின் கருத்து!

20 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்த கருத்து தென்கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் பலர் அதிருப்தியும் வெளியிட்டுள்ளனர்.
"எமது கட்சிக்கு கொள்கை உள்ளது. ஜனநாயக உரிமையுமுள்ளது. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சமூகப் பொறுப்புமுள்ளது. சமூகத்தை வழி நடத்துவதில் அனுபவமுள்ளது. இதைக் கேள்விக்குட்படுத் தும் எந்த தார்மீக உரிமையும் சுமந்திரனுக்கு இல்லை" என முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஒருவரே குமுறி அறிக்கை விட்டுள்ளார்.


**“பொறுமைக்கும் எல்லையுண்டு!”**

# தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனா பரவல் இல்லை

## சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பெருமிதம்

**சாவகச்சேரி,நவ.6**
**"தென்மராட்சி பிரதேச மக்கள் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடித்ததால் கொரோனாத் தொற்று பிரதேசத்தில் இதுவரை ஏற்படவில்லை. இதனால் பிரதேச மக்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்." இவ்வாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார் தெரிவித்தார்.**

சாவகச்சேரி நகரப் பகுதியில் நடைபெற்ற. "முகக் கவசமே முக்கியம்" என்னும் தொனிப் பொருளில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு திட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவித்ததாவது;
சந்தை வியாபாரிகள். நுகர்வோர்,வர்த்தகர்கள் போன்றோர் சுகாதாரத் திணைக்களத்தினர் விடுத்துள்ள அறிவித்தல்களை ஏற்று தமது சொந்த விடயமாகக் கருதிச் செயற்பட்டதால் கொரோனாத் தொற்று பிரதேசத்தில் ஏற்படவில்லை.
இதேவேளை வெளிமாவட்டங்களிலிருந்து நள்ளிரவு வேளையில் எவரும் வந்தால் கூட எமக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதற்கு உதவியுள்ளனர்.
பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு பொதுமகனும் கொரோனாத் தொற்று பிரதேசத்தில் ஏற்படக்கூடாது என்ற சமூகப் பொறுப்புடன் செயற்படுவது பாராட்டத்தக்கது. இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து பிரதேசத்தைப் பாதுகாக்க வேண்டும் - என்றார். (ஐ-9)



# இருதரப்பு மோதலில் இளைஞர் கொலை

கொழும்பு, நவ. 6
புத்தளம் உடப்பு பகுதியில் இரு குழுவினருக்கிடையிலான மோதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 29 வயதுடைய இளைஞரே கொல்லப்பட்டார்.
சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தலைமறைவாகியுள்ளனர். அவர்கள் தேடப்படுகின்றனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-இ)



# மீன் வியாபாரிக்கு கொரோனா

## இழுத்து மூடப்பட்டது ஏறாவூர் பொதுச்சந்தை

மட்டக்களப்பு, நவ. 6
ஏறாவூர் புன்னைக்குடா வீதியிலுள்ள ஏறாவூர் பொதுச் சந்தை நேற்று வியாழக்கிழமை மூடப்பட்டது.
அங்குள்ள மிச் நகர் கிராமத்தில் முதன் முதலாக மீன் வியாபாரி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார். அதனையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என ஏறாவூர் நகர சபைத் தலைவர் தெரிவித்தார்.
இதனையடுத்து ஏறாவூர் பொதுச்சந்தை வளாகத்தின் அனைத்து பகுதிகளும் தொற்று நீக்கம் செய்யப்பட்டன. சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த அனைத்து சந்தை வியாபாரிகளும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-46)

# புதுத் தம்பதிக்கும் வந்தது கொரோனா!

## முதல்நாள் சுகாதார விதிமுறை; இரண்டாம் நாள் அறவேயில்லை

கொழும்பு, நவ. 6
திருமணம் முடித்த புதிய தம்பதிக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று மாவனெல்ல சுகாதார மருத்துவ அதிகாரி கெமுனு விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
மாவனெல்ல நகரில், கடந்த மாதம் 9ஆம் திகதி அந்தத் தம்பதியர் திருமணம் முடித்துள்ளனர். திருமண நிகழ்வில் 120 பேர் வரை பங்குபற்றியுள்ளனர். இந்தத் திருமண நிகழ்வு முதல் நாள் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்பட்டிருந்தாலும் இரண்டாவது நாள் எவ்வித சுகாதார பாதுகாப்புமின்றி நடத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். அவர்கள் உடலில் அசாதாரண தன்மையை உணர்ந்து மருத்துவமனைக்குச் சென்றுள்ளனர். அங்கு நடத்திய சோதனையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
மணமகன் கொழும்பு பிரதேச பொலிஸ் நிலையமொன்றில் கடமையாற்றுகின்றார். அந்தத் திருமண நிகழ்வில் கொழும்பிலிருந்து பலர் கலந்துகொண்டிருந்தனர் என்றும் மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.
கேகாலை மாவட்டத்தில் இதுவரை 151 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-இ)

# பொருளாதார மேம்பாடு தொடர்பில் அமைச்சர்கள் ஞாயிறன்று ஆராய்வு

## யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களின் திணைக்களத் தலைவர்களுக்கு அழைப்பு

சாவகச்சேரி, நவ. 6
சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.
கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்தக் குழு உருவாக்கப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராட்சி, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருடன் 19 இராஜாங்க அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.
கூட்டத்தில் கலந்துகொண்டு மாவட்ட அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார். (து-9)

# அரசியல் கைதிகள் தொடர்பில் அரசாங்கத்தின் முடிவு என்ன?

## *நீதி அமைச்சரிடம் சுரேன் ராகவன் கேள்வி*

கொழும்பு,நவ.6
இலங்கை சிறைகளில் அரசியல் கைதிகளாக தற்போது உள்ளோர் எத்தனை பேரென்றும், அவர்கள் தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன், நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.
இது தொடர்பான விளக்கத்தை எதிர்வரும் சர்வதேச நீதி தினத்துக்கு (ஜூலை 17 /2021) முன்னதாக தெரிவிக்கும்படியும், தேவைப்பட்டால் நாடாளுமன்ற விவாதமொன்றை ஒழுங்கு செய்யுமாறும் கலாநிதி சுரேன் ராகவன் நீதி அமைச்சரிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
போர்க் காலத்தில் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளில் பலர் படிப்படியாக முன்னைய ஆட்சிக் காலங்களில் விடுவிக்கப்பட்டிருந்தாலும், தற்போது எஞ்சியிருப்பவர்களையும் சட்டத்தின் முன்னிறுத்தியோ அல்லது பொது மன்னிப்பு அளித்தோ சமூகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இப் பிரச்சினைக்கு தீர்வுகாண நீதி அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-இ)

# வட்டு. வீதி இன்றும் மூடப்படும்

யாழ்ப்பாணம், நவ. 6
கொக்குவில் வட்டுக்கோட்டை வீதியின், ஆனைக்கோட்டைச் சந்தியிலிருந்து வட்டுக்கோட்டைச் சந்தி வரையான பகுதி இன்று வெள்ளிக்கிழமையும் மூடப்பட்டிருக்கும் என்று யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பொறியியலாளர் குறிப்பிட்டுள்ளார்.




இந்த வீதியில் அகலிப்பு வேலைகள் நடைபெற்று வந்த நிலையில் காப்பெற் இடும் பணி நேற்றும் இன்றும் இடம்பெறுகின்றது. அதனாலேயே இன்று வெள்ளிக்கிழமையும் வீதி மூடப்பட்டிருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (து)

*தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு*

# தென்மராட்சியில் முதலாம்கட்ட நிவாரணம்

சாவகச்சேரி, நவ. 6
தென்மராட்சி பிரதேசத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் பணிகளை பிரதேச செயலகம் ஆரம்பித்துள்ளது.
பிரதேசத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட 34 குடும்பங்களுக்கே தலா 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளும் 500 ரூபா பெறுமதியான மரக்கறி வகைகளும் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு கொண்டு சென்று அவை வழங்கப்பட்டு வருகின்றன என்று செயலகத்தினர் தெரிவித்தனர். (து-9)

# மக்களைக் குற்றஞ்சாட்டாது உரிய நடவடிக்கை எடுங்கள்

## அரசிடம் தேசிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு,நவ.6

கொரோனா வைரஸ் பரவலுக்கு. பொதுமக்களை அரசு குற்றம் சாட்டுவது அரசினதும், அதன் தலைமைத்துவத்தினதும் அனுபவமின்மையை வெளிப்படுத்தியுள்ளது என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா வைரஸ் பரவல் என்பது சாதாரண விடயமில்லை. தனியொரு குழுவினரால் இதற்குத் தீர்வைக் காணமுடியாது. அரசுக்கு அனைவரினதும் ஆதரவு தேவை. எனினும் அரசு ஏனையவர்களின் கருத்துக்களை செவிமடுக்கத் தயாரில்லை. இவ்வாறான நெருக்கடியான தருணத்தில் ஏனையவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்து செயற்படுவது அவசியமான விடயம்.

இதுவே மிகச்சிறந்த தலைமைத்துவம் எனப்படும். ஆனால் துரதிஷ்டவசமாக நாங்கள் எங்கள் கருத்துக்களை, யோசனைகளை முன்வைக்கும் போது, அவர்கள் தங்களைக் காயப்படுத்தியதாகக் கருதுகின்றனர். தனிப்பட்ட விடயமாக கருதுகின்றனர். அவர்கள் மக்கள் மீதே முழுமையாக குற்றஞ் சாட்டுகின்றனர்.

அரசு தனது அதிகாரங்கள் தொடர்பில் அச்சப்படுகின்றது. எனினும் வலுவான தலைமைத்துவம் இதனைச் செய்யாது. என்றார். (சு-இ)



# கொரோனா எதிர்ப்புசக்தி குடிநீர் அறிமுக நிகழ்வு


கிளிநொச்சி,நவ.6

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கரைச்சி பிரதேச சமூக மருத்துவ உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் கோவிட் 19 நோய் எதிர்ப்புசக்தி குடிநீர் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் நிதிப் பங்களிப்புடன்,சபை மண்டபத்தில் ஆரம்பமான நிகழ்வில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், சபைக்கு வருகை தந்த பொதுமக்கள் ஆகியோருக்கு குடிநீர் வழங்கப்பட்டது.

ஆயுள்வேத மருத்துவ திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பேயால, சுலதாரணி ஆகிய மருந்துகளும் இதன்போது வழங்கப்பட்டன.

தொடர்ந்து கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள உருத்திரபுரம், கந்தபுரம், இராமநாதபுரம், முரசுமோட்டை ஆகிய பிரதேசங்களில் உள்ள சுதேச மருத்துவ நிலையங்களில், பொதுமக்களுக்கான குறித்த நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன என கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார். (ஐ-6)



# தண்ணீரையும் மின்சாரத்தையும் சிக்கனப்படுத்துங்கள்

கொழும்பு,நவ.6

மின்சாரத்தையும், குடிதண்ணீரையும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்சக்தி வள அமைச்சும், நீர் விநியோக சபையும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

மேல் மாகாணத்திலும், நாட்டின் சில இடங்களிலும் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ளது. இதனால் மின்சாரம் மற்றும் தண்ணீர்ப்பாவனை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் தண்ணீரையும், மின்சாரத்தையும் சிக்கனமாகப் பயன்படுத்தாத பட்சத்தில், எதிர்காலத்தில் அவற்றைத் தடையின்றி விநியோகிப்பதில் சிக்கல் ஏற்படலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (சு-இ)

# தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கால் 13 பேர் பாதிப்பு



சாவகச்சேரி,நவ.6

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் (ஒக்ரோபர் ) 13 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என்று சுகாதார திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்தினர், உள்ளூராட்சி சபையினர் மேற்கொண்ட தொடர் பரிசோதனை நடவடிக்கைகளால் கடந்த மாதத்தில் டெங்கால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது .

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் 44 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

# பல்கலைக்கு அனுமதிபெற்ற மாணவரின் விவரம் கோரல்

கிளிநொச்சி,நவ.6

கிளிநொச்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் (2019) தோற்றிய பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

மாணவர்களின் பெயர்களுடன் துறைரீதியாக கிடைக்கப் பெற்ற பல்கலைக் கழகங்களின் விவரத்துடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அபிவிருத்தி பிரிவில் சமர்ப்பிக்குமாறு, வலயக் கல்வி பணிப்பாளர் சி.கமலராஜன் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-159)

# ஆதனவரி குறைப்பு தொடர்பில் கரைச்சி சபையில் தீர்மானம்

கிளிநொச்சி, நவ.6

கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்படும் ஆதன வரி இவ்வருடம் இறுதி நாளுக்கு முன்னர் குறைக்கப்படும் என்று பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையினால் அறவிடப்பட்டுவரும் ஆதன வரியினை குறைப்பது தொடர்பான விசேட அமர்வு நேற்றுமுன்தினம் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

ஆதனவரி தொடர்பான பிரேரணையை பிரதேச சபை உறுப்பினர் [illegible] நாதன் [illegible] சபையில் சமர்ப்பித்தார். தொடர்ந்து சபை உறுப்பினர்களால் குறித்த விடயம் விவாதிக்கப்பட்டது. இந்த நிலையில் சபை உறுப்பினர்கள் ஆதன வரியை குறைக்க வேண்டும் என்ற விடயத்தை ஏற்றுக்கொண்டனர்.

சபையில் ஆதன வரி குறைப்பு தொடர்பில் இவ் வருடம் மார்கழி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து உறுப்பினர்களும் மக்கள் கருத்தினைக் கேட்டு தீர் [illegible] ன்றை நிறைவேற் [illegible] சபையினா [illegible] தீர்மானிக் [illegible]

# குருகுலம் நிகழ்ச்சிகள் நேத்ராவில் ஒலிபரப்பு

யாழ்ப்பாணம்,நவ.6

குருகுலம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நேத்ரா தொலைக்காட்சி அலைவரிசையினூடாக ஒளிபரப்பட்டு வருகின்றன.

அதில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட காணொளிகளை www.youtube.com/c/ChannelNIE எனும் youtube அலைவரிசையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

கல்வி மறுசீரமைப்பு கிறங்க பல்கலைக்கழகங் [illegible] ய இரா

# கொரோனாவை விரட்ட கிளிநொச்சியில் வழிபாடு

கிளிநொச்சி, நவ.6

உலகெங்கும் வாழுகின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி கிளிநொச்சி கந்தன்குளம் செல்வாநகர் ஓம் சக்தி வேலன் ஆலயத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெறவுள்ளது.

அடியார்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறே வழிபாட்டில் ஈடுபடுமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)

# உலக வங்கி தந்த நிதியை கிடப்பில் போடுவது ஏன்?

## ஓமல்பே தேரர் அரசிடம் கேள்வி

கொழும்பு, நவ.6
கொரோனா ஒழிப்புக்காக உலக வங்கி வழங்கிய 30 பில்லியன் ரூபா நிதியில், சுகாதார உபகரங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்காமைக்குக் காரணம் தரகுப் பணம் கிடைக்காது என்பதா?. இவ்வாறு ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளார் ஓமல்பே சோபித தேரர். எம்பிலிப்பிட்டியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உலக வங்கி பில்லியன் 167 டொலரை நிதியுதவியாக வழங்கியுள்ளது. அந்த நிதியை சுகாதார உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகவே உலக வங்கி வழங்கியுள்ளது என்று ஊடகங்கள் மூலம் அறிய முடிகின்றது.

67 பில்லியன் டொலர் என்பது 3 ஆயிரத்து 39 கோடி ரூபாவாகும். இந்த நிதி சுகாதாரத் துறைக்காக இந்த முறை வரவுசெலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் அரைவாசியாகும்.

இவ்வளவு பெரும் நிதி கிடைத்தும், சம்பந்தப்பட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இந்த நிதியுதவியானது இரத்தாகும் நிலைமை காணப்படுகின்றது. கொரோனா ஒழிப்புக்கான இந்த நிதியில் எந்தவிதச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதாலேயே இந்த நிதி இரத்தாகும் நிலைமை தோன்றியுள்ளது. பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்வதற்குப் போதியளவு இயந்திரங்கள் இல்லை. அவசர சத்திர சிகிச்சை வசதிகள் குறைவு. இப்படியான தேவைகள் காணப்படுகின்றபோதும் இந்த நிதியை அதற்குப் பயன்படுத்தாமைக்குக் காரணம் என்ன?

அந்த நிதியில் எவ்வித செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என உலக வங்கியின் சுகாதார அலுவலகத்தின் இலங்கை காரியாலயப் பணிப்பாளர் வைத்தியர் ஜயசுந்தர பண்டார சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிதியை பயன்படுத்தாமைக்கான காரணம் என்னவென வேதியளாளர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேசி ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளார். என்றார். (எ-இ)

# வேலணை பிரதேச சபை

# 2021ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2021 தொடக்கம் 31.12.2021 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 06.11.2020 முதல் 19.11.2020 மதியம் 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 20.11.2020 பிப 1.00 மணிவரை
கேள்விதிறக்கும் திகதி:- 20.11.2020 பி.ப 1.30 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | 2021 ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்ததொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | ---------- | 2,000.00 | 5,000.00 | 19,800.00 |
| 2 | வேலணை அம்பிகைநகர் மீன்சந்தை | ---------- | 2,000.00 | 5,000.00 | 14,300.00 |
| 3 | சரவணை மீன் சந்தை | ---------- | 2,000.00 | 5,000.00 | 8,800.00 |
| 4 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | --------- | 2,000.00 | 5,000.00 | 99,000.00 |
| 5 | நயினாதீவு மீன், மரக்கறிச் சந்தை | ---------- | 2,000.00 | 5,000.00 | 33,600.00 |
| 6 | மண்டைதீவு வாராந்த சந்தை | ---------- | 2,000.00 | 5,000.00 | 11,600.00 |
| 7 | சாட்டி வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்களான சுற்றுலாமையம் (படகு சேவை தவிர்த்து) | ------- | 2,000.00 | 10,000.00 | 341,000.00 |
| | வேலணை துறையூர் மொத்தமீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 8 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதியகட்டிடம்) | -------------- | 2,000.00 | 10,000.00 | 220,000.00 |
| 9 | சிற்றுண்டிச்சாலை | 1,500.00 | 2,000.00 | 5,000.00 | 89,100.00 |
| 10 | கடைஇல-5 கோழிக்கடை | 1,000.00 | 2,000.00 | 5,000.00 | 37,400.00 |
| | வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்) | | | | |
| 11 | மரக்கறி, மீன் | ------------ | 2,000.00 | 5,000.00 | 30,250.00 |
| 12 | சிற்றுண்டிச்சாலை | 1,750.00 | 2,000.00 | 10,000.00 | 27,600.00 |
| 13 | கோழிக்கடை | 750.00 | 2,000.00 | 10,000.00 | 253,550.00 |
| | புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும் | | | | |
| 14 | கோழிக்கடை | 500.00 | 2,000.00 | 5,000.00 | 75,600.00 |
| 15 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 600.00 | 2,000.00 | 5,000.00 | 14,058.00 |
| 16 | புங்குடுதீவு முற்றவெளி மீன், மரக்கறிச்சந்தை | ------ | 2,000.00 | 5,000.00 | 33,550.00 |
| 17 | கடை இல 01 (புங்குடுதீவு உப அலுவலகத்திற்கு அருகிலுள்ளகடைகள்) | 1,500.00 | 2,000.00 | 15,000.00 | 180,000.00 |
| 18 | கடை இல 03 | 1,500.00 | 2,000.00 | 15,000.00 | 180,000.00 |
| | நயினாதீவு சந்தை கடைத்தொகுதி | | | | |
| 19 | கடை இல 01 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 20 | கடை இல 02 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 21 | கடை இல 03 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 22 | கடை இல 04 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 23 | கடை இல 05 | 1,000.00 | 2,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 24 | கடை இல 06 | 1,100.00 | 2,000.00 | 11,000.00 | 132,000.00 |
| 25 | கடை இல 07 | 1,100.00 | 2,000.00 | 11,000.00 | 132,000.00 |
| 26 | கடை இல 08 | 900.00 | 2,000.00 | 9,000.00 | 108,000.00 |

**பொதுவான நிபந்தனைகள் :- சந்தை**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்வியில் பங்குபற்ற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
3. கேள்விப்படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **"தவிசாளர், பிரதேசசபை, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணைவீதி,யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 20.11.2020ம் திகதி நண்பகல் **12** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
4. பொதுச்சந்தைகளில் இருந்து **500மீற்றர்** சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய் ,கோழி, இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.
5. கடைகள், இறைச்சிக்கடைகள் வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் கோழி இறைச்சிக்கடைக்குரிய கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும் ஏனையவர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 24.11.2020 திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். பராமரிப்பு வேலைகள் குத்தகைதாரர்களாலேயே சபையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. கேள்விப்படிவத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் உடன்படிக்கையினை இரத்துச்செய்யும் உரிமை பிரதேசசபைக்கு உண்டு.
8. தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கேள்விகோரலில் பங்குபற்ற முடியாது.
9. மேலதிக விபரங்களை வேலணை பிரதேசசபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்களிலும் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**நிபந்தனைகள் - கடைத்தொகுதி**

1) ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்கமுடியும்.
2) கேள்விப்படிவத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3) கேள்விகோரலில் சித்தி பெற்றவர்கள் குறித்த கேள்வித் தொகையினை **(Key Money)** ஒரே தடவையில் செலுத்தி பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினைச் செய்து கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் செய்து கொள்ளும் உடன்படிக்கையினை இரத்து செய்யும் அதிகாரம் பிரதேசசபைக்கு உண்டு என்பதனையும் கருத்தில் கொள்வதோடுகேள்வித் தொகையினை **(Key Money)** எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.
4) மூன்று மாத வாடகையை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
5) மாதாந்த கடை வாடகையாக பிரதேசசபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப் பணத்தினை அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்குள் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் மாதாந்த வாடகையுடன் சேர்த்து மாதாந்த வாடகைப் பணத்தின் **10%** தண்டப்பணமாக அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசம்பர் மாதம் 30ம் [illegible] முன்னதாக செலுத்துதல் வேண்டும்.
6) சுகாச[illegible]யின் சிபார்சினைப் பெற்று, சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை [illegible] சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும். கடைகள் யாவும் தற்போதுள்ள [illegible]க்கு வழங்க[illegible] [illegible] கொள்ளல் வேண்[illegible]

[illegible]

# தற்போதைய நடைமுறை சமூகப் பரவலைத் தடுக்கும்

## தொற்றுநோயியல் நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.6
கொரோனா தொடர்பில் தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகள், சமூகப் பரவலைத் தடுக்க வழிவகுக்கும் என்று தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவ கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மேல் மாகாணம் மற்றும் அதிக ஆபத்துள்ள பிற பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு விதிப்பது போன்ற நடவடிக்கைகள் நாட்டில் வைரஸைக் கட்டுப்படுத்த பங்களித்துள்ளன.

கொரோனாவை எதிர்த்துப் போராட சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் முயற்சிகள் மட்டும் போதாது. வைரஸை அகற்றுவதற்கான முயற்சியில் மக்களின் ஆதரவும் முக்கியமாகும்- என்றார். (ஐ-இ)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ. கூ. சங்கம் (வ-து) பிரதான வீதி, பண்டத்தரிப்பு, மீதிகள் உறுதிப்படுத்தல்.

சங்கத்தின் 2019/2020 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் கிராமிய வங்கிகளின் வாடிக்கையாளர்கள் பின்வரும் திகதிகளில் தங்களது சேமிப்புப் புத்தகத்துடன் கிராமிய வங்கிகளுக்கு நேரடியாகச் சமுகமளித்து தங்களது மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மாதகல் கிராமிய வங்கி - 10.11.2020**
**இளவாலை கிராமிய வங்கி - 11.11.2020**
**பண்டத்தரிப்புகிராமிய வங்கி -12.11.2020**
**13.11.2020**

**06.11.2020** **கணக்காய்வாளர்.**

## ஒன்பதாம் வருட நினைவு



உதிப்பு 01 . 01 . 1981
உதிர்வு 18 . 10 . 2011

**அமரர் செல்லத்துரை வினோகரன்**

திதி : சஷ்டி (06.11.2020)

எம் நிஜத்தினை நாம் தொலைத்து
இன்றுடன் ஆண்டுகள் ஒன்பதாகிறது
உன் கனிவான முகமும் கலகலப்பான பேச்சும்
கருணைகூர் செயற்பாடுகளும்
எம் கண் நிறைந்து கரைகின்றன.
தொலை தூரம் எமைவிட்டுச் சென்றாலும்-எம் நினைவு
என்றும் தொடர்ந்து வரும்

இடைக்குறிச்சி மேற்கு,
வரணி.

**அப்பா,அம்மா,சகோதரிகள், மைத்துனர்கள்,மருமக்கள்**

## 10 ஆம் வருட நினைவுகளில்...



மலர்வு 25 . 05 . 1959
உதிர்வு 06 . 11 . 2010

**அருளானந்தம் ஜெபநேசன்**

பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.
(மத் 11 : 28)

"அருள் நேசவாசா"
சென் தோமாஸ் லேன்
பருத்தித்துறை.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள் மற்றும்
குடும்ப உறவுகள்.
தகவல் : சகோதரன் - அ. அருள்நேசன்

## விற்பனைக்கு

கார் உடனடி விற்பனைக்கு
**Toyota Aqua xurban 2015 (Model) White Colour 59 800 Km First Owner.**
விலை - 4.950. 000 பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 307 9459**

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டமானது மீண்டு வரும் வருமானமாக ரூபா. 78,316,554.90 ஆகவும் மீண்டுவரும் செலவினமாக ரூபா. 71,640,920.00 ஆகவும் எதிர்பாாத்த மானியம் உட்பட மூலதனச் செலவினமாக ரூபா. 39,674,400.00 ஆகவும் அமையும் வகையில் தயாரிக்கப்பட்டு சபையினது VSTPS/2020/10/37/369 இலக்க 2020.10.20 ஆம் திகதிய தீர்மானம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
து.நடராஜசிங்கம்,
தவிசாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

## இரத்தினபுரி, கேகாலைக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, எஹலியொட, குருவிட்ட, எலபாத்த ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கும் கேகாலை மாவட்டத்தின் ருவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## வேலையாட்கள் தேவை

வீதி புனரமைப்பு வேலைகளுக்காக கோப்பாய், சாவகச்சேரி பிரதேசங்களில் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு
**Sierra Stock Pile Yard,**
நாவற்குழி வடக்கு, நாவற்குழி
(சிவபூமி அருகாமையில்)
**077 695 9642**

# பொது அறிவித்தல்
# பிரதேச சபை, வேலணை

1. **படவரைஞர்களை பதிவு செய்தல்**
   2021ம் ஆண்டு படவரைஞர்களாக பதிவு செய்ய விரும்புவோர்களில் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தோர் 2020ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் பதிவினை புதிப்பிப்பதோடு, புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் 2021 ஆம் ஆண்டு பங்குனி 31ம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளவும். மேலதிக விபரங்களிற்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.
2. **ஒப்பந்தகாரரைப் பதிவுசெய்தல்**
   2020ம் ஆண்டிற்கான நிர்மாணப் பொறியியல் வேலைகளை செய்து வழங்குவதற்கு தேசிய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவை வைத்திருக்கும் ஆர்வமுடைய மனுதாரர்கள் பதிவை மேற்கொள்ள முடியும்.
3. **வழங்குனரைப் பதிவு செய்தல்**
   2020ம் ஆண்டில் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகமை வாய்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 15.01.2021 திகதி வரை தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
4. **வியாபார உரிம அனுமதிப்பத்திரம்**
   இப் பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்கு பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் 2021ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31-03-2021ம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக் கொள்ளவும். 31-03-2021ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாதவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
5. **சூழல் பாதுகாப்பு உரிமம்**
   தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. **துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகங்களுக்கான உரிமம்.**
   துவிச்சக்கரவண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31-03-2021ம் திகதிக்கு முன்னர் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2021ம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.
7. **விளம்பரங்கள் அமைத்தல் /காட்சிப்படுத்தல்**
   பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியினைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல் வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.
8. **கட்டட அனுமதி வழங்கல்.**
   - தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.
   - புதியகட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாது விடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை புதிப்பிக்க வேண்டும்.
   - அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
   - சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைப்பவர்கள் சபையின் அனுமதிபெற்று அமைத்தல் வேண்டும்.
9. **வீதி ஒழுங்கும், தெருவோர வியாபாரமும்**
   1. வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடத்துமாறு வர்த்தகநிலைய உரிமையாளருக்கு அறியத்தருகின்றேன்.
   2. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள்,. மரக்கறி, பழங்கள், தேங்காய், முட்டை என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
10. **கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்.**
   சபை எல்லைக்குள்ளாக ஏதேனும் பொது வழி மீது அல்லது ஏதேனும் பொது வழி அருகில் கால்நடைகள் கட்டப்படவோ அல்லது அலைந்து திரியவோ விடாது கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காதுவிட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு பிரதேச சபைகள் சட்டத்திற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.
11. **பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**
   திண்மக் கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும் போது அவைதரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக் கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்பட வேண்டும். அல்லாதவிடத்து பிரதேச சபைச் சட்ட ஏற்பாட்டிற்கு அமைவாக பிரதேச சபையால் தன்னுரித்தாக்கப்பட்டு துப்பரவு செய்யப்படும்.

10\. **பொதுச் சுகாதாரத்தை பேணுதல்**
   உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

**நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேசபை.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## செல்வி மகேந்திரன் கோபினா



**அன்னை மடியில்**
**23.10.1993**

**ஆண்டவன் அடியில்**
**29.11.2019**



**திதி :- வளர்பிறை சதுர்த்தி (18.11.2020)**

***கோபினா நற்சுகமே!***

கோபினா ! கோபினா ! எங்குற்றாய் என்று
தேடும் குரலொலிகள் காதில் கேட்கிறது.
இங்குற்றேன் ! எங்கள் ஆத்தாளாம் துர்க்கையின்
இணையடி வீற்றிருந்து விளம்புகிறேன் சில வார்த்தை!

எனையீன்ற அன்னையே !
எனக்காகவே வாழ்ந்த பேரன்புத் தந்தையே !
விழி நீர் சொரியாமல் விம்மித் தவிக்காமல்
உம்பிள்ளை துர்க்கையின் நிலையடியாள் எனத் தேறும்.

தாத்தாவாய் பாட்டியாய் தயவாய் அணைத்தவரே!
ஊட்டி உயிர் வளர்த்த உண்மை உறவுகளே!
மாமாமார் மாமிமார் ஆகி நின்ற உறவுகளே!
தேம்பாமல் வாழ்ந்திடுங்கள் கோபினா நீள் சுகமே!

சித்தப்பா சித்தியாய் சிறப்புடை நண்பர்களாய்
பெரியப்பா பெரியம்மா என்றெல்லாம் அன்பு தந்தீர்!
மச்சான்மாராகியும் மச்சாள்மாராகியும் கோடி அன்பு செய்தோரே!
பூவுலகில் உடன்பிறாவாச் சோதரராய் இணைந்தவரே!

தெல்லிப்பளையில் எனைக்காத்த மருத்துவமே!
'குடில்' வாழ் உறவுகளே ! கும்பிட்டு வணங்குகிறேன்.
காலத்தினாற் செய்த உதவிகளை நான் மறவேன்.
அத்தனையுள்ங்களையும் நன்றியுடன் பணிகின்றேன்.

ஏக்கமுற வேண்டாம்
பேதலித்து அழ வேண்டாம்
நானிங்கு நலமேயுள்ளேன்.
நீவிர் சுகம் வாழ வாழ்த்துகின்றேன்.


**இப்படிக்கு கோபினா**

**இல.92, குமரபுரம், பரந்தன்.**
**077 521 3022**

**குடும்பத்தினர்**
**ம.திலகவதி (தாய்), நா.மகேந்திரன் (தந்தை)**

# மரண அறிவித்தல்

## திரு.முத்து சுந்தரமூர்த்தி J.P (மூர்த்தி)



**அன்னை மடியில்**
**03.10.1933**

**முனியப்பர் அடியில்**
**02.11.2020**

(உரிமையாளர் பைனல் ரேணிங் வேக்ஸ். M.S.M. இண்டர்ஸ்ரீஸ். M.S.R. ஹாட்வெயர்ஸ். வெஸ்லி தியேட்டர் (மானிப்பாய்). ஈஸ்வரி ஜுவல்லர்ஸ். முன்னாள் தலைவர். முன்னாள் உபதலைவர். 15 ஆண்டுகள் நிர்வாக உறுப்பினர் மானிப்பாய் கிராமசபை. முன்னாள் தலைவர் மானிப்பாய் பனம்பொருள் அபிவிருத்தி சபை (1979-1981). இலங்கை அரசின் கௌரவ சான்றிதழ் பெற்ற பிரபல தொழிலதிபர். போசகர்-மானிப்பாய் பட்டின சபை சித்தி விநாயகர் ஆலயம். அகில இலங்கை சமாதான நீதவான். சமூகசேவகர்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும். மானிப்பாய். லண்டன். கனடாவை வதிவிடங்களாகவும் கொண்ட திரு. முத்து சுந்தரமூர்த்தி கடந்த (02.11.2020) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து-தெய்வானை தம்பதியரின் பாசமிகு இளைய மகனும். காலஞ்சென்ற தவசி-காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்புச் சகோதரனும். புவனேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும். ஜெயந்திரன் (கனடா). தர்மகுலேந்திரன் (லண்டன்). ஜெயந்தினி (கனடா). சுகந்தினி (கனடா). புவனேந்தினி (வவுனியா). முரளிதரன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும். பிலோமினா (கனடா). அலிஸ். அனித்தா (லண்டன்). தவராஜா (கனடா). புஸ்பராகவன் (கனடா). விக்கிரமசேகரம் (பிரதி பணிப்பாளர். விவசாயத் திணைக்களம். திருகோணமலை). துஷிந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். உஷாந்தன்-சுகன்யா. யோசுவா-குளோடியா. ஜொய் தர்ஷிக்கா. சுனிக்கா. திலக்ஷன். கோபிக்கா-றொஷான். தனுஷிக்கா. டிக்ஷன்-நிக்கிதா. சோபிகன். சாருகா. ஆர்த்திகா. யதுர்ஷிகா. அனொஜி. ஆருஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடா நேரப்படி 08.11.2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிமுதல் மாலை 7 மணிவரை "AETERNA FUNARAL COMPLEX, 55, RUE GINCE, SAINT-LAURENT, H4NIJ7" இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 09.11.2020 திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

**ஜெயந்திரன் - 5148653466**
**தவராஜா - ஜெயந்தினி - 5148875981**
**ராகவன்-சுகந்தினி - 5145668683**
**தர்மகுலேந்திரன் - 00447727660914**
**பொன்ஸா -விக்கிரமசேகரம் - 0775438494**
**முரளிதரன் - 00447490186116**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம்
06
.
06
.
1938

மறைவு
05
.
11
.
2020

## செல்லத்துரை பத்மநாதன்

டச்சு வீதி, உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பத்மநாதன் நேற்று (05.11.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுபாங்கி (இத்தாலி), கஜனி (சுவிஸ்), சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகலிங்கம்(இத்தாலி), அகிலேந்திரன் (சுவிஸ்), கஜேந்திரன் (அஞ்சல் அலுவலகம் - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கம்சா, அபிசா, அரங்கன், அபர்ணன், அபூர்ணா, யதுஷா, சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சாரதாமணி, பகவதிப்பிள்ளை, தருமராசா, இராஜேஸ்வரி, சாந்தறஞ்சினி, சிறிதரன், ஈஸ்வரன் ஆகியோரின் மூத்த சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
**குடும்பத்தினர்.**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**

# வெளிமாவட்டங்களிலிருந்து வந்தால் பதிவு செய்யுங்கள்

## கிளி. மாவட்டச் செயலகம் அறிவுறுத்தல்

கிளிநொச்சி, நவ. 6

வெளி மாவட்டங்களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு தமது தேவை கருதி வருகை தருவோர் தம்மை பதிவு செய்யுமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகம் கோரியுள்ளது.

பதிவுகளை தங்கியுள்ள பிரதேசத்தின் பிரதேச செயலரிடம் அல்லது கிராம அலுவலரிடம் அல்லது பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் அல்லது சமுர்த்தி அலுவலரிடம் மேற்கொள்ள முடியும்.

தகவல்களை மறைத்து தங்கியுள்ளோர் தங்குமிடங்களை வழங்கியோர் தொடர்பில் கடுமையான சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதனால் அந்த நடவடிக்கையிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஓ.6)

# ஊரடங்கு இனிமேல் நீடிக்காது; பாதுகாப்பு மக்களின் கையில்

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 6

தனிமைப்படுத்தல் ஊரடங்கை எதிர்வரும் 9ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிக்கும் திட்டம் இல்லை. அதனால் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றி, பாதுகாப்பான முறையில் அனைவரும் வாழ வேண்டும்.

இவ்வாறு கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்ரினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் நாட்டைத் தொடர்ந்தும் முடக்கி வைத்திருக்க முடியாது, நாட்டைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள இந்தக் காலப்பகுதியை முழுமையாகப் பயன்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், நபர்களுக்கிடையில் வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார். அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு பிறகும் தனிமைப்படுத்தல் உத்தரவை நீடிக்கும் எண்ணம் இல்லை. மக்கள் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி தங்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றாமல் இருக்கும் வகையில் செயற்படவேண்டும்.

நாட்டை முடக்குவது இலகுவான காரியம், அவ்வாறு செய்வதால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது, வாழ்வாதாரம் பாதிக்கப்படும். அதனால் அனைவரும் பொறுப்புடனும், பொதுநலன் கருதியும் செயற்பட வேண்டும். சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றினால் முன்னோக்கிப் பயணிக்க கூடியதாக இருக்கும்- என்றார்.

(எ.ஓ.44)

# பெறுகை அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## போசாக்கு மேம்பாட்டு செயற்திட்டம் சபைநிதி - 2020

01. **தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம்** சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான போசாக்குணவு வழங்கல் திட்டத்திற்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்களுக்காக கோருகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான வியாபாரப்பெயர்ப்பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** (தொலைபேசி இலக்கங்கள். 021-222-2700. பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **06.11.2020** திகதியிலிருந்து **19.11.2020** ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் இடத்திலிருந்து **06.11.2020 ம்** திகதியிலிருந்து **19.11.2020 ம்** திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/- (வரி நீங்கலாக)**செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கைக் கடிதத்துடன் வியாபாரப்பெயர்ப்பதிவுச் சான்றிதழின் பிரதியும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்**, எனும் முகவரிக்கு **20.11.2020** ம் திகதி **வெள்ளிக்கிழமை** காலை **10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 60 (அறுபது) நாட்கள் (19.01.2021) வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | பொருள் விபரம் | தேவையான அளவு | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/(10)/ Acc/Proc/ Nutrition Food-2020 | பால்மா –400 Gram | 1974 பைக்கற் | 15 நாட்கள் | 15,000.00 | 16.02.2021 |
| | நெத்தலி கருவாடு | 1481 Kg | | | |
| | கடலை | 987 Kg | | | |
| | ரின்மீன் 425 Gram | 2961 ரின் | | | |
| | சத்துமா –250Gram | 987 பைக்கற் | | | |
| | பருப்பு | 2961 Kg | | | |

தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.
06.11.2020

**PHYSICS**
**"ZOOM" வகுப்புக்கள்**
Mr.M. கருணாநிதி B.Sc (Hons)
**(077 618 3064)**
2022 A/L - சுழற்சி இயக்கம்
2021 A/L - புலங்கள், வெப்பவியல்
2021 A/L DAY - சடமும் கதிர்ப்பும்

**O/L, A/L ICT**
**ON-LINE CLASSES (THEORY, PRACTICAL)**
* Personal Class
* Group Class
* ZOOM Class

Weekdays - 7AM - 8.30 AM
Weekends - 7AM - 8.30 AM
தொடர்புகளுக்கு: 076 685 2529
(SMS your Name, Address to Mobile no.)

**இலவச ஆங்கில, கணினி வகுப்புகள்**
**ONLINE COURSES (INDIVIDUAL/GROUP)**
* ENGLISH COURSES
* ICT COURSES

காலம்: மூன்று மாதங்கள்
சான்றிதழ் வழங்கப்படும்.
ஆரம்பம்: சனி, ஞாயிறு
10.00 AM- 01.00 PM
கற்கைப்பிரிவில்:
* பாடசாலை மாணவர்கள்
* உ/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்
* உத்தியோகத்தர்கள்

அரச, தனியார் இணைய முடியும்.
மாணவர்கள் தமது பதிவினை அலுவலகத்தில் உறுதிப்படுத்தி Zoom வகுப்பில் இணைய முடிவும்.
On-line IELTS வகுப்புகள் ஆரம்பமாகின்றன
பதிவு:
Type your Name , Course Name to 076 685 2529 /077 602 1794

## ஒரே நாளில்...

இதுவே இலங்கையில் கொரோனா வால் ஒரே நாளில் அதிக எண்ணிக்கை யிலானோர் பலியான நாளாகும். உயி ரிழந்த 5 பேரும் கொழும்பு மாவட்டத் தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். அவர்களில் நால்வர் வயோதிபர்கள் எனவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் ஏற்கனவே கொரோனா காரணமாக 24 உயிரிழப்புகள் பதிவா கியிருந்த நிலையில், மேலும் 5 சாவு கள் பதிவாகியுள்ளமைக்கு அமைய, இதுவரை 29 கொரோனா உயிரிழப்பு கள் பதிவாகியுள்ளன.

நாடு கொரோனாவின் மூன்றாவது அலைக்குள் சிக்கி கடந்த 14 நாள்களில் (இரு வாரங்கள்) 16 பேர் உயிரிழந்த சோகம் ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் விவரங்களை அரச தகவல் திணைக்களம் நேற்று மாலை வெளியிட்டுள்ளது.

**25ஆவது சாவு**

கொழும்பு 2 ஐச் (கொம்பனித் தெரு) சேர்ந்த, 46 வயதான ஆணொருவர், நேற்றுமுன்தினம் பிம்புர ஆதார வைத் தியசாலையில் உயிரிழந்துள்ளார். கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட நிலையில், அவ்வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வந்த குறித்த நபர், நீண்ட காலமாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது

**26ஆவது சாவு**

கொழும்பு, வெல்லம்பிட்டி பிரதேசத் தைச் சேர்ந்த, 68 வயதான பெண் ணொருவர் நெஞ்சு வலி காரணமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள் ளார். அவருக்கு மேற்கொண்ட பிரேத பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

**27ஆவது சாவு**

கொழும்பு 12 (வாழைத்தோட்டம் பகுதி) சேர்ந்த, 58 வயதான பெண்ணொரு வர் தனது வீட்டில் உயிரிழந்துள்ளார். அவரது பிரேத பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது. அவர் கொரோனாத் தொற்று காரணமாக ஏற்பட்ட மாரடைப் பால் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

**28ஆவது சாவு**

கொழும்பு 14 ஐச் (கிராண்ட்பாஸ்) சேர்ந்த, 73 வயதான பெண்ணொருவர், தனது வீட்டில் உயிரிழந்துள்ளார். அவரது பிரேத பரிசோதனையில் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டுள் ளது. கொரோனாத் தொற்றுக் காரண மாக நுரையீரல் பாதிக்கப்பட்டு அவர் உயிரிழந்துள்ளார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

**29ஆவது சாவு**

கொழும்பு 15ஐச் (மட்டக்குளி பகுதி) சேர்ந்த, 74 வயதான ஆணொருவர் தனது வீட்டில் உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொண்ட பிரேத பரிசோ தனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட மார டைப்பு காரணமாக அவர் உயிரிழந்துள் ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ.22)

## ஒரே குடும்பத்தை...

திப்படுத்தப்பட்டுள்ளது. முதல் தொற்றா ளரின் உறவினர்களான 39 மற்றும் 61 வயது பெண்கள் மற்றும் 14 வயது சிறு வன் ஆகியோருக்கே தொற்று ஏற்பட் டுள்ளது. கடந்த 28 ஆம் திகதி கர வெட்டி வடக்கு ஆண்டாவளவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. அவருடன் தொடர்பிலி ருந்த சுமார் 60 குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டன. அத்துடன் ஒரு கிராம மும் முடக்கப்பட்டது. அவருடன் தொடர் பிலிருந்தோருக்கான பி.சி.ஆர். பரிசோ தனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஆண்டாவளவு தொற்றாளர் சென்று வந்ததாகக் கூறப்படும் அல்வாயி லுள்ள வீட்டாரும் தனிமைப்படுத்தப்பட் டிருந்தனர். அவர்களுக்கு மேற்கொள் ளப்பட்ட சோதனையிலேயே கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மூவரும் நேற்று மாலையே மருதங்கேணி மருத்துவம னைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள னர்.

(ஓ.5,26)

## உடுவில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையின் தனிமைப்படுத்தல் விடுதியில் நேற்றுச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொச்சிக்கடையில் உணவகம் நடத்தி வரும் தந்தையிடம் சென்று வந்த குடும் பத்தினர் கடந்த 30ஆம் திகதி முதல் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில் 9 வயதுச் சிறு வனுக்கு தொற்று இருப்பது கடந்த 4ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து சிறுவனையும் அவ னுக்கு உதவியாக தாயாரையும் மருதங் கேணி கொரோனா சிகிச்சை மருத்துவ மனைக்கு சுகாதார அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில் அவரது வீட்டுடன் தொடர்பிலிருந்து சிறுவனின் அம் மம்மா, மாமா ஆகியோருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனை யில் தொற்று இல்லை என்பது உறுதிப் படுத்தப்பட்டது. அவர்களின் பராமரிப் பிலேயே 11 வயது சிறுமி மற்றும் 7 வயதுச் சிறுவன் ஆகியோர் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

11 வயது சிறுமிக்கு கடும் காய்ச்சல் இருந்து வந்த நிலையில் அவர் நேற் றைய தினம் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளார். அவர் சிறுமி என்பதால் அவரது அம்மம்மாவும் கூடவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். 7 வய துச் சிறுவன் தனியே இருக்கவேண்டி வரும் என்பதால் அவனும் மருத்துவம னைக்கு நேற்றைய தினம் அம்புலன் ஸில், உடுவில் பிரதேச பொதுச் சுகா தார பரிசோதகர் நா.குகானந்தன் முன்னிலையில் ஏற்றி அனுப்பி வைக் கப்பட்டான்.

இந்த நிலையில் சிறுமிக்கு காய்ச்சலுக் குரிய மருந்துகளை வழங்கி மருத்துவ மனை நிர்வாகம் நேற்று இரவே அம்பு லன்ஸில் அவர்களை வீட்டில் கொண்டு வந்து விட்டுள்ளது.

(ஓ.5,26)

## தனிமைப்படுத்தலுக்கு...

நீதிமன்றால் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்.

கடந்த 31ஆம் திகதி வெளிமாவட்டத்தில் இருந்து வந்ததாக வடலியடைப்பு பண் டத்தரிப்பு கலைவாணி வீதி பகுதியில் 27 வயதுடை நபர் ஒருவர் தனிமைப்ப டுத்தப்பட்டிருந்தார்.

முதலாம் திகதி குறித்த நபர் வெளியில் சென்றுள்ளார். விடயம் தொடர்பில் தக வலறிந்த அப்பகுதி சுகாதார பரிசோத கர் நபரை விசாரிக்கச் சென்றுள்ளார். அந்த நபர் சுகாதாரப்பரிசோதகரை தகாத வார்த்தைகளால் பேசியதுடன் எச்சரிக்கையும் விடுத்துள்ளார். உடன டியாக சுகாதாரப்பரிசோதகர் இள வாலை பொலிஸில் முறைப்பாடு செய் துள்ளார். சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன் றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள் ளார்.

(ஓ.26)

## பாதுகாப்பு...

கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு கைகலப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கடமையிலிருந்த இரண்டு பொலிஸார் உடனடியாக இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மதுபோதையில் பொலிஸார் இருவர் கடமைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளனர். அதனை பாதுகாப்புக் கடமையில் நின் றிருந்த இராணுவத்தினர் தட்டிக்கேட்ட போது பொலிஸார் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பதி லுக்கு இராணுவத்தினரும் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் இராணுவத்தினர் முறைப் பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸ் திணைக்க ளத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்ப டுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்க ளின் அடிப்படையில் பொலிஸார் இரு வரையும் பணி இடைநிறுத்தியுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ.26)

## அமைச்சர்கள்...

ளில் பங்கேற்பதற்காக தென்னிலங்கை யிலிருந்து அமைச்சர்கள், அதிகாரி கள், அவர்களின் பணிக் குழாமினர் என்று சுமார் 100 பேர் வருகை தரவுள் ளனர். இவர்கள் எந்தவொரு தனிமைப் படுதலுக்கும் உட்படுத்தப்படாமல், பி. சி.ஆர். சோதனைக்கும் உட்படுத்தப்ப டாமல் இன்றைய தினம் கலந்துரையா டலில் பங்கேற்கவுள்ளமை தமக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என வடக்கு மாகாண அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத் துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் அமைச்சர்க ளான நீர்பாசன அமைச்சர் சமல் ராஜ பக்ச, மின்சக்தி அமைச்சர் டலஸ் அழ கப்பெரும, நெடுஞ்சாலைகள் அமைச் சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகி யோர் தலைமையிலான குழுவினரே வருகை தரவுள்ளனர்.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், ஆளுநர் என 19 பேரும், அமைச்சின் செயலர்கள், இரா ஜாங்க அமைச்சின் செயலர்கள் மற் றும் அவர்களது அலுவலர்கள் என்று 36 பேரும், வடக்கிலுள்ள திணைக்க ளத் தலைவர்கள் 73 பேரும் மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். தென்னி லங்கையிலிருந்து வரும் குழுவின ருடன் அவர்களது சாரதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் உதவியாளர்கள் என்று சுமார் 30 பேரும் யாழ்ப்பாணத் துக்கு வருகை தரவுள்ளனர்.

மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்கேற்கும் அமைச்சர்கள் குழாம் அதன் பின்னர் வடக்கில் 4 வீதிகளின் திருத்தப் பணி களை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

1.6 கிலோ மீற்றர் நீளமுடைய யாழ்ப்பா ணம் கடற்கரை வீதி 488 மில்லியன் ரூபா செலவிலும், 5.5 கிலோ மீற்றர் நீளமான வல்லை உடுப்பிட்டி வல்வெட் டித்துறை வீதி 507 மில்லியன் ரூபா செலவிலும், 1 கிலோ மீற்றர் நீளமான அரியாலை - நெடுக்குளம் வீதி 54 மில் லியன் ரூபாவிலும், 2 கிலோ மீற்றர் நீளமான கிளிநொச்சி - செல்வபுரம்- கிருஸ்ணபுரம் வீதி 74 மில்லியன் ரூபா விலும் மறுசீரமைப்புச் செய்யப்படவுள் ளன.

மாவட்டங்களுக்கு இடையிலான போக் குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலை யிலும், மேல் மாகாணத்திலிருந்து வடக்குக்கு வருவோர் கட்டாய தனிமைப் படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அறி வித்திருந்த நிலையிலும், பொது நிகழ் வுகள், கூட்டங்கள் நடத்தவேண்டாம் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையிலான கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டிருந்த நிலையிலும் அவை அனைத்தையும் மீறியே இன்றைய கூட்டம் மற்றும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தென்னிலங்கையில் பலருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டு வரும் நிலையில் அங்கிருந்து பெரும ளவானோர் எந்தவித தனிமைப்படுத்த லும் இல்லாது பொது நிகழ்வுகளில் பங்கேற்பது தமக்கு அச்சத்தை ஏற்படுத் தியுள்ளதாக வடக்கு மாகாண அதிகாரி கள் தெரிவிக்கின்றனர்.

(ஓ.5)

## கொடிகாமம்...

வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ரோலர் வாகனம் அவர் மீது ஏறி யமையால் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பலாங்கொடவைச் சேர்ந்த பிறமரத்ன (வயது - 62) என்பவரே உயிரிழந்துள் ளார். படுகாயமடைந்த நிலையில் பருத் தித்துறை ஆதார மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் அவர் உயிரிழந் துள்ளார்.

(ஓ.26)


## இன்னொரு...

தொழிற்சாலை, பேலியகொட மீன் சந்தை என்று இரண்டு பிரதான கொத் தணிகளாகவும் நாட்டின் பல பாகங்களி லும் சிறிய கொத்தணிகளாகவும் வியா பித்து தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்ற நிலையில், வெலிக்கடை சிறைச்சாலை யிலும் ஒரு சிறிய கொத்தணி உருவாகி யுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் 7 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற் பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

(ஓ.22)

# மரண அறிவித்தல்



## திரு. கணபதிப்பிள்ளை வல்லிபுரநாதன்

மட்டுவில் வடக்கு மட்டுவிலை பிறப்பிடமாகவும் கல்வயல் 1ம் கட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை வல்லிபுரநாதன் அவர்கள் அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி கணபதிப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராமலிங்கம் திலகவதி தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலேஸ் வரியின் பாசமிகு கணவரும், சுப்பிரமணியம், வேலாயுதபிள்ளை, மயில்வாகனம், சிவபாக்கியம், புவனேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், கந்தசாமி, தேவகுஞ்சரம், தியாகராஜா, தங்கராஜா, பரமானந்தன், மனோகரன், காலஞ்சென்றவர்க ளான ஸ்ரீபாஸ்கரன், ஸ்ரீரங்கன், இராஜேஸ்வரி மற்றும் தனலக்சுமி, பத்மாவதி, காலஞ்சென்ற மகாலக்சுமி மற்றும் விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மயூரதன் (லண்டன்), மயூரதி (பிரான்ஸ்), மைவிழி (ஆசிரியர், மு/கொல்லவிளாங்குளம் அ.த.க. பாடசாலை), மாறன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனா (லண்டன்), சண்முகராசன் (பிரான்ஸ்), கிருஷ்ணகந்தா (பரணி ஹாட்வெயார் உரிமை யாளர்), கல்பனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்மிகன் (லண்டன்), அனெக்ஷன் (லண்டன்), அங்கிதா (லண்டன்), வினோஷா (பிரான்ஸ்), கிஷானா (பிரான்ஸ்), அபூர்னிஷா (பிரான்ஸ்), பிரகலாதன், பரணிகா, தரணிகா, நிர்தன் (கனடா), பிரியானா (கனடா), மித்ரா (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2020) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# இறுதிக்குள் நுழைந்தது மும்பை இந்தியன்ஸ்



டில்லி கப்பிரல்ஸை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய மும்பை அணி இறுதி ஆட்டத்துக்கு நேரடியாகத் தகுதி பெற்றது. அந்த அணி 6 ஆவது தடவையாக இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்துள்ளது. இதுவரை இறுதி ஆட்டத்துக்கு தேர்வான 5 தடவைகளில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 தடவைகள் கிண்ணத்தை வென்றுள்ளது.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் முதலாவது தகுதிகாண் ஆட்டம் மும்பை இந்தியன்ஸ் அணிக்கும், டில்லி கப்பிரல்ஸ் அணிக்கும் இடையில் டுபாயில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி கப்பிரல்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

மும்பை இந்தியன்ஸ் அணி 5 இலக்குகளை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றது. இசான் கிசான் 30 பந்துகளில் 55 ஓட்டங்களையும், சூரியகுமார் யாதவ் 38 பந்துகளில் 51 ஓட்டங்களையும், குயிட்டன் டீ குக் 25 பந்துகளில் 40 ஓட்டங்களையும், ஹார்த்திக் பாண்டியா 14 பந்துகளில் 37 ஓட்டங்களையும் பெற்றனர். ஆரம்பத்தில் சுமாரான ஆட்டத்தை மும்பை வெளிப்படுத்தியிருந்தது. இறுதிக் கட்டப் பந்துப் பரிமாற்றங்களில் இசான் கிசான் மற்றும் ஹார்த்திக் பாண்டியா இருவரும் பந்துகளை தெறிக்க விட்டு ஓட்டங்களைக் குவித்தனர். பந்து வீச்சில் அஸ்வின் 29 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். தொடர் முழுவதும் சிறப்பாக பந்து வீசிய ரபாடா நேற்று இலக்கு எதுவும் கைப்பற்றாமல் 42 ஓட்டங்களைக் கொடுத்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய டில்லிக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணி ஓட்டக் கணக்கை தொடங்க முன்னரே இலக்குகள் சரிந்தன. பிர்த்வி சா, தவான், ரஹானே என்று முன்வரிசை வீரர்கள் ஓட்டங்கள் பெறாது பவிலியன் திரும்பினர். பும்ரா, போல்ட் இருவரும் அசத்தல் ஆரம்பம் கொடுத்தனர். ஸ்ரொய்ன்ஸ் மற்றும் அக்சர் பட்டேல் இருவரும் சிறப்பாக ஆடினர். ஸ்ரொய்ன்ஸ் 46 பந்துகளில் 65 ஓட்டங்களையும், பட்டேல் 33 பந்துகளில் 42 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர். 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களை மாத்திரம் அந்த அணி பெற்றது. பந்து வீச்சில் பும்ரா 14 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், போல்ட் 9 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பும்ரா தெரிவானார். (ஒ,5)

# கொரோனாத் தொற்று: நேற்றும் 383 பேருக்கு!

கொழும்பு,நவ.6

இலங்கையில் நேற்றும் 383 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனாக் கொத்தணிகளின் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்களே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து மினுவாங்கொட, பேலியகொட கொரோனாக் கொத்தணிகள் ஊடான பரவலின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 92 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 570 ஆக உயர்வடைந்துள்ளது. அவர்களில் 5 ஆயிரத்து 918 தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 6 ஆயிரத்து 623 பேர் குணமடைந்துள்ளனர். 29 பேர் உயிரிழந்துள்ளனர். (ஒ-22)

# 84 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலில்

## அவர்களை இறுக்கமாக கண்காணிக்க ஜனாதிபதி கோத்தாபய கட்டளை

கொழும்பு, நவ. 6

நாடு முழுவதும் 31 ஆயிரத்து 457 வீடுகளில் 84 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் மாத்திரம் 13 ஆயிரத்து 911 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 676 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர் சுயதனிமைப்படுத்தல் நடைமுறைகளை கடுமையாக கண்காணிக்குமாறு ஜனாதிபதி கோத்தபாய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கொரோனா தடுப்பு செயலணியின் நேற்றைய கூட்டத்திலேயே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது. நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் கண்டறியப்பட்டால் அவர்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்கள் வசிக்கும் பிரதேசம் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். தேவை ஏற்படின் அப் பிரதேசத்தை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கலாம். பொருளாதார மத்திய நிலையங்களை மொத்த விற்பனைக்கு மட்டும் மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. மரக்கறி, பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களை எடுத்துக்கொண்டு மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்தில் ஈடுபடும் லொறிகளுக்கு ஊரடங்கு அனுமதிப்பத்திரங்கள் அவசியமில்லை என்றும் இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,இ)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
இன்னும் 03 நாட்களே
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

## இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 6

சாவகச்சேரி ஐயனார் கோயில் பகுதியில் நேற்று இரவு தவறான முடிவு எடுத்து இளம் குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார்.

கிறிஸ்துராஜா விக்ரர் (வயது-22) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் மூன்று மாதங்களுக்கு முன்னரே திருமணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-159)

## முதியவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 6

சாவகச்சேரி கல்வயல் பகுதியைச் சேர்ந்த க. வல்லிபுரநாதன் என்ற 70 வயது முதியவர் ஒருவர் தவறான முடிவு எடுத்து நேற்று மாலை உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ,159)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: குரு
077 80 51 655

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் பலாலி றோட் கோண்டாவிலில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. (கோண்டாவில் சந்திக்கு அருகாமை.
தொடர்பு:
077 6234 204

**மலிவு விற்பனை**

70% அல்கோல் கொண்ட sanitizer மலிவு விலையில்

| | | | |
|---|---|---|---|
| 50ml | 90.00 | 1l | 700.00 |
| 100 ml | 170.00 | 4l | 2500.00 |
| 500ml | 380.00 | 5l | 3000.00 |

தொடர்பு:
35/58, Kalasalai Road, Thirunelvely, Jaffna.
077 - 509 2737

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ஊரெழு ஆனந்தகானம் பகுதியில் 44 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு:
076 6400 974, 077 8949 549

**உடனடி வேலைவாய்ப்பு**
**சர்வதேச நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு**

1. தட்டெழுத்தாளர்
2. அலுவலக உதவியாளர்
3. விற்பனை முகவர்கள்

A/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் சுயவிவரக்கோவையை Viber or Whatsapp இல் அனுப்பவும்
070 375 0002



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.